நாங்கள் இதைத் தயாரிக்க உதவுகிறோம்—இது எவ்வளவு சிறந்தது என்பது எங்களுக்குத் தெரியும்




S. 48-460 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

நவம்பர் 7 தீபாவளி 7 நவம்பர்

சென்னை-ப்ரபாத் டாக்கீஸ்

மற்றும்

| | | | |
|---|---|---|---|
| சேலம் | ... ஓரியண்டல் | பெங்களூர் | ... அபேரா |
| கோவை | ... கர்னடிக் | திருநெல்வேலி | ... ராயல் |
| திருச்சி | ... ராஜா | வேலூர் | ... அபேரா |
| மதுரை | ... சென்டிரல் | நாகர்கோவில் | ... ஸ்ரீராம் |
| காரைக்குடி | ... ராமவிலாஸ் | காஞ்சீவரம் | ... முருகன் |

இத்தனை நகரங்களிலும் நான் ஏககாலத்தில் வருகிறேன்

என்கிருள்

# மனோன்மணி

உங்கள் மதிப்பு வாய்ந்த நக்ஷத்திரங்கள் அனைவரும் என்னை திறமையுடன் சித்தரிக்கிறார்கள்.

வாருங்கள்! வாருங்கள்!!

தவருமல்

சந்திக்க வாருங்கள்.

நவம்பர் 7 தீபாவளி 7 நவம்பர்


Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor. C. R. Srinivasan, B.A

# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

Vol. 13 No. 42 15-11-'42 Price 2 Annas








# சென்றவார நிகழ்ச்சிகள்

## காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம்

பம்பாயில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில் இம் மாதம் 5-ம் தேதி யன்று ஒரு தீர்மானம் ஐந்து மணி நேர விவாதத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் ஸாரம் வருமாறு:—மூன்று வாரங்களுக்கு முன்பு வர்தாவில் செய்யப்பட்ட தீர்மானத்துக்குப்பிறகு ஏற்பட்டுள்ள விளைவுகளையொட்டி, கமிட்டி தேசீயக் கோரிக்கையை மறுபடியும் விளக்கியிருக்கிறது. வர்தா தீர்மானம் சம்பந்தமாக ஸர் க்ரிப்ஸும், மற்றவர்களும் வெளியிட்டுள்ள ஆட்சேபங்களுக்கெல்லாம் தீர்மானம் சமாதானம் கூறுகிறது. இந்தியாவை சுயேச்சை நாடாக அறிவித்ததும் தற்காலிக சர்க்கார் ஒன்று அமைக்கப்படுமென்றும், சுயேச்சைஇந்தியா ஐக்கிய நாடுகளுடன் நேசமாக இருக்குமென்றும் தீர்மானம் தெளிவு படுத்தியிருக்கிறது, தற்காலிக சர்க்கார் இந்தியாவிலுள்ள எல்லாப் பிரிவுகளின் பிரதிநிதித்துவத்துடன் கூடியதாக இருக்குமென்பதையும் தீர்மானம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஆக்கிரமிப்புகளிலிருந்து இந்தியாவைப் பார்துகாப்பதே இந்த சர்க்காரின் திட்டமான வேலை. வெளி நாட்டுச் சிப்பாய்கள் இந்தியாவிலேயே தங்கியிருக்கவும், பொது ஜனங்கள் ஆயுதம் தாங்கித் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், அஹிம்ஸா வழியில் எதிர்த்துப் போரிடவும் தீர்மானத்தில் வசதிகள் காணப்பட்டிருக்கின்றன.

புதிதாக் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் ஒரு அபிவிருத்தி காணப்படுகிறது. தற்காலிக சர்க்கார் கூட்டும் அரசியல் நிர்ணய சபை எத்தகைய அரசியலை வகுக்குமென்பதன் சூசகமும் தீர்மானத்தில் கிடக்கிறது. இந்தியா விடுதலை பெற்றுவிட்டால், அப்பால் மெஜாரிட்டி வகுப்பினரின் ஆட்சி தான் இங்கு நடக்கும் என்று முஸ்லிம்லீக் போன்ற சில ஸ்தாபனங்கள் தப்பெண்ணம் கொண்டிருப்பதைப் போக்குவதே இதன் நோக்கம். இந்தியாவின் எதிர்கால அரசியல் சமஷ்டி அரசியலாக இருக்க வேண்டுமென்றும், அதில் சேரும் அங்கங்களுக்குப் பெருவாரியான சுயேச்சை இருக்கவேண்டுமென்றும் இந்த அங்கங்களிடம் வரையறுக்கப்படாத மிச்ச அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்றும் தீர்மானம் யோசனை கூறுகிறது. சுயேச்சை இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையும் விளக்கப்பட்டிருக்கிறது. உலக சமஷ்டி ஏற்படுவதையே தீர்மானம் ஆதரிக்கிறது. இப்பொழுது அன்னியர் ஆதிகத்திலுள்ள ஆசிய நாடுகளின் சுதந்திரமும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கோரிக்கை என்ன என்பதைத் தீர்மானம் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது; காங்கிரஸ் நோக்கம் சம்பந்தமாக உண்மையிலேயே எற்பட்டுள்ள தப்பெண்ணங்களைப் போக்க அது முயல்கிறது. யுத்தத்தில் ஜயிப்பதற்காகப் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிக்கும்படித் தீர்மானம் நேசநாடுகளுக்கு விக்ஞாபித்துக்கொள்ளுகிறது; தவறினால் தீவிர நடவடிக்கையில் இறங்கி, தன்னுடைய பிறப்புரிமையாகிய சுதந்திரத்தையும், சுயேச்சையையும் நிலைநாட்ட நாடு முற்படும். எனவும் காங்கிரஸ் தலைமைப் பதவியைக் காந்திஜியிடம் ஒப்படைப்பதாகவும் தீர்மானம் தெரிவிக்கிறது.



### தீர்மானம் தயார்

காரியக்கமிட்டி தயாரித்த புதிய தீர்மானத்தின் நகலை மஹாத்மாஜிக்கு ஸ்ரீ மஹாதேவ தேசாய் காட்டுகிறார்.

## காரியக் கமிட்டியில் காந்திஜி கூறியது

காங்கிரஸ் காரியக் கமிட்டி மறுநாள் மூன்று மணி நேரம் கூடிப்பேசியது; காந்திஜி பிரசங்கம்தான் முக்கியமானது. காந்திஜி தமது பிரசங்கத்தில், ஆயுதம் தாங்கியும் அஹிம்ஸா முறையிலும் போராடுவதாகக் காங்கிரஸ் புதிதாக் வெளியிட்டுள்ள யோசனைக்கு நேசதேசத்தினர் இணங்கி வராவிட்டால்தான், தாம் பொதுஜன இயக்கம் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லி அதன் தன்மை எவ்விதமிருக்குமென்பதையும் விளக்கினர். அதோடு அவர் தாம் இந்த புதிய யோசனையை வைஸ்ராய்க்குக் கடிதமூலம் அறிவிக்கப்போவதாகவும், தாம் அஹிம்ஸையில் பூரணமாக நம்பிக்கை கொண்டிருந்தாலும், ஆயுதம் தாங்கியும் போராட காங்கிரஸ் முன் வந்திருப்பதைத் தாம் ஆதரிப்பதாகவும், ஆனால் அஹிம்ஸா முறையில் எதிர்க்கத் தமக்குள்ள உரிமையைத் தாம் விட்டுக் கொடுக்கவில்லையென்றும் சொன்னதாகத் தெரிகிறது.

## “இதில் சந்தேகம் இல்லை”

ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் சென்ற 6-ம் தேதி ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் புரிந்தார். அப்போது இந்தியப் பிரச்னையை அவர் குறிப்பிட்டார். “யுத்தம் முடிந்ததும் இந்தியா சுயேச்சை அடைவதற்கான முழு வசதியையும் அளிப்பதாக நாங்கள் பிரதிக்ஞை செய்திருக்கிறோம். இதில் சந்தேகமில்லை என்று நான் மீண்டும் சொல்லுகிறேன். கடுமையான அறிக்கைகளும் பயமுறுத்தல்களும் பிரச்னையைத் தீர்த்துவிடுவதாகா. இவற்றால் ஆத்திரமே உண்டாகும். நியாயமான தர்க்கங்களும் யோசனைகளுமே உதவியாயிருக்கும். “இந்தியாவுக்கு இப்பொழுது சுதந்திரம் கிடைக்காவிட்டால், ஜனங்களுக்கு உள்ளூரவிருக்கும் அதிருப்தி திடீரென பொங்கியெழும்: ஆகவே ஜப்பானியர் வந்திறங்குவார்களானால் அவர்களுக்கு வரவேற்பளிக்கவும் ஜனங்கள் முற்படுவார்களென்பது எங்களுக்குத்தெரியும்” என்று காந்திஜி கூறுகிறார். அப்படி இம்மாதிரியான அபாயம் ஏற்படுமானால், காந்திஜி கூறுகிறார். அவரது நண்பர்கள் ஆகியோரின் மனப்பான்மையும், பிரசாரமுமே அதற்குக் காரணமாகும். நான் இந்தியாவை விட்டதிலிருந்து உருவான யோசனைகளெதுவும் கூறப்படவில்லை. பலாத்காரம், ஒழுங்கின்மை, கலவரம் என்ற மிரட்டல்களுக்குப் பிரிட்டிஷ் ஸர்க்காரோ அல்லது இந்திய ஸர்க்காரோ இடம்கொடுத்துவிட மாட்டார்கள். நாங்கள் அந்த மாதிரி செய்யக்கூடாதென்றும் இடங் கொடுக்கக்கூடாதென்றும் இந்தியர்களின் பெரிய பகுதியினரைச் சேர்ந்த பிரதிநிதிகள் எங்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஆனால், யுத்தம் முடியும் வரை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவது, இந்தியா, மைனாரிட்டி கட்சிகள், நேசதேசங்கள் ஆகியவற்றின் பால் நீங்கள் செலுத்த வேண்டிய கடமையென்பதை நாங்கள் வற்புறுத்திக் கூறியாகவேண்டும். அதன் பிறகு, நாங்கள் உறுதி கூறியபடி இந்திய ஜனங்கள் சுயேச்சையடைவதற்கான முழு வசதியையும் அளிப்போம்.”



### நேரு குடும்பத்தினர்

அகில இந்தியக் கமிட்டிக் கூட்டத்தில் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு வந்த ஜவஹர் குடும்பத்தார். ஸ்ரீ. பிரோஸ்காந்தி, ஸ்ரீமதி இந்திரா காந்தி. ஸ்ரீமதி கிருஷ்ணா ஹதிசிங், ஸ்ரீ கிருஷ்ண ஹதிசிங் முதலியோர்.

## அகில இந்தியக் கமிட்டிக் கூட்டம்

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி இதற்கடுத்த நாள் பிற்பகல் 2-45 மணிக்கு ஆரம்பமாயிற்று. குவாலியா குளக்கரை மைதானத்தில் அமைக்கப்பட்ட அழகிய பந்தலில் கூட்டம் கூடியது. சுமார் 250 அங்கத்தினர்களும் 10 ஆயிரம் விஸிட்டர்களும் வந்திருந்தனர். வந்தே மாதர கீதத்துடன் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. காங்கிரஸ் தலைவருக்குப் பக்கத்தில் ஒரு சோபாவில் மகாத்மா கால்மீது கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார். காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாத் பிறகு பேச ஆரம்பித்து, சுமார் $1\frac{3}{4}$ மணி நேரம் பேசினர். புதிய தீர்மானத்தின் தத்துவத்தை அவர் விளக்கிச் சொன்னர். இரு



## லண்டனில் இந்தியாவின் பிரதிநிதிகள்

லண்டனில் யுத்த மந்திரி சபைக்கு இந்தியப்பிரதிநிதிகள் வந்தபோது அவர்களைப் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் வரவேற்றார். (இடதிலிருந்து) இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி, திவான் பஹதூர் ஸர் ஏ. ராமசாமி முதலியார், நவாநகர் ஜாம் ஸாஹேப், மிஸ்டர் சர்ச்சில், குடியேற்ற நாட்டு மந்திரி லார்ட் க்ரான் போர்ன்.

# சென்ற வார நிகழ்ச்சிகள்

★

### இந்திய நெருக்கடி பற்றி லூயி பிஷர்

"காகஸஸிலிருந்து கல்கத்தா வரையுள்ள விஸ்தீரணமான பிரதேசத்தில் நாம் பெரிய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இப்பிரதேசம் முழுதுக்குமே இந்தியா தான் ராணுவத் துறையில் பிரதம கேந்திர ஸ்தானமாகவும், நமது அந்தரங்க சுத்திக்குப் பரீக்ஷையாகவும் விளங்குகிறது.

"ஆதலால் உடனே யாராவது தைரியமாகத் தலையிட்டு துரிதமாக நடவடிக்கை யெடுத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்யக்கூடியவர் ஜனாதிபதி ரூஸ்வெல்ட். காந்தியுடன் பேச்சு நடத்தக்கூடிய நிலைமைக்கு அவர் பிரிட்டிஷ் ஸர்க்காரைக் கொண்டுவர வேண்டும்" என்பதாக அமெரிக்கப் பத்திரிகைக்காரரான மிஸ்டர் லூயி பிஷர் நியூயார்க் "நேஷன்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அதே பத்திரிகையில் செப்டம்பர் 19-ந் தேதி யிட்டு மிஸ்டர் லூயி பிஷர் எழுதியுள்ள வியாசத்தில், அவர் கிரிப்ஸ தூது முறிந்த காரணத்தை விளக்கியிருக்கிறார்.

இந்தியாவில் உடனே தேசிய சர்க்கார் அமைக்கப்படும் என ஸர் கிரிப்ஸ் இந்தியத் தலைவர்களுக்கு அளித்த வாக்குறுதியை அவரே பின்னர் வாபீஸ் வாங்கிக் கொண்டதால் தான் அவரது முயற்சி பலிக்காது ஒழிந்தது என்றும், இந்த விஷயம் இந்தியாவுக்கு வெளியிலிருப்பவருக்குத் தெரியாதென்றும் இந்தியாவில் பொதுவான நிலையைப்பற்றி பலர் பலவிதமாக கருத்துக்களை வெளியிட்டாலும் இது விஷயத்தில் மட்டும் எல்லோரும் ஒருமனப்பட்டிருந்ததாகவும், ஸர் கிரிப்ஸ் ஆகஸ்ட் 23-ந் தேதி 'நியூயார்க் டைம்' ஸில் இதைப்பற்றி எழுதியுள்ள வியாசத்திலும் இந்த பிரஸ்தாபமில்லை யென்றும் மிஸ்டர் பிஷர் அந்த வியாசத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

* * * * *

### அமெரிக்கப்படை வருகை

பிரெஞ்சு வட ஆப்பிரிக்காக் கரையில் பல இடங்களில் யுனைடெட் ஸ்டேட்ஸ் நில, கடல், விமானப்படைகள் இறங்கியிருப்பதாக உத்தியோக முறையில் சென்ற 8-ந் தேதி தெரிவிக்கப்பட்டது.

ஜெர்மனியும் இத்தாலியும் படையெடுக்கக் கூடியதை எதிர்பார்த்து அதனைத்தடுப்பதற்காக அமெரிக்கப்படை முன்னதாக பிரெஞ்சு வட ஆப்பிரிக்கக் கரையில் இறங்கியதாக அமெரிக்க ஜனாதிபதி காரியாலயத்தினர் தெரிவிக்கின்றனர்.

* * * * *

### ஆல்ஜியர்ஸ் அமெரிக்கர் வசம்

ஆல்ஜியர்ஸில் போர் நடவடிக்கைகளை நிறுத்துவதென வட ஆப்பிரிக்காவிலுள்ள பிரஞ்சு தளகர்த்தருக்கும் அமெரிக்கச் சேனையின் தலைவருக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக விச்சி ரேடியோ இம்மாதம் 8-ந் தேதி அறிவித்தது.

அட்மிரல் டார்லானின் அனுமதியின் பேரிலேயே பிரஞ்சு தளகர்த்தர் அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டார். போர் நிறுத்த ஒப்பந்தம் ஆல்ஜியர்ஸுக்குமட்டுந்தான் செல்லுமென விச்சி செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது. ஆல்ஜியர்ஸிலுள்ள பிரஞ்சுத் துருப்புகள் தங்களுடைய படைகளுக்குள்ளேயே வைக்கப்பட்டிருக்கும்.

ஆனால் அவைகளிடமுள்ள ஆயுதங்கள் பிடுங்கப்படமாட்டா.

ராணுவக் காரணங்களை முன்னிட்டு ராபர்ட்டிலுள்ள பிரஞ்சு விமான தளத்தைக் காலி செய்து விட்டதாக மொராக்கோ ரேடியோ அறிவித்தது.

* * * * *

### அமெரிக்க-விச்சி உறவு முறிவு

யு. எஸ். ஸர்க்கார் வட ஆப்பிரிக்காவில் யுத்தம் ஆரம்பித்ததன் மூலம் தங்களுக்கும் பிரான்ஸுக்கும் உள்ள உறவை ஒழித்து விட்டார்களென விச்சி மந்திரி சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

* * * *

### ரஷ்ய யுத்த லக்ஷியம்

ஸோவியத் புரட்சியின் 25-வது வருஷ பூர்த்தி தினத்தில், மாஸ்கோவில் ஸ்டாலின் பேசு

(அடுத்த பக்கம் பார்க்க)



## கெண்ட் கோமகன் ஞாபகார்த்தம்

விமான விபத்தில் உயிரிழந்த கெண்ட் கோமகன் ஆத்ம சாந்திக்காக வெஸ்ட் மினிஸ்டர் மாதாகோவிலில நடந்த பிரார்த்தனையில் இந்தியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்திய ஹைகமிஷனர் ஸர் அஸிஸல் ஹக், ஸர் ராமசாமி முதலியார, நவாநகர் ஜாம்ஸாஹேப் முதலியோர் நிற்பதைப் பார்க்கலாம்.



# காற்றாடி

## ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

முஸ்லிம் லீகின் கௌன்சில் கூட்டம் டில்லியில் ஞாயிறன்று நடந்தது. நெருக்கடியான நேரத்தில் கூடிற்று. கவலையும் கசப்பும் கண்கூடு. கவர்ன்மெண்டின் செல்லப் பிள்ளைகள் நிலைமையை அறிந்து நடப்பரா? அவர்களுடைய போக்கு நம் நம்பிக்கைக்கு இடம் தரவில்லை. இருந்தாலும் சபலம் விடவில்லை. ஒன்று கூடலாகாதா என்ற சபலம். ஒன்று பட்டால் விமோசனம் உண்டு. ஒன்று படும் வரையில் விக்னம் விலகாது. அது தெளிவு. முஸ்லிம்களும் அறிவர்; அறிந்தே பேரம் பேசுகின்றனர். நெருங்க நெருங்கக் கேட்பது அதிகரிக்கிறது. அதிகம் கொடுப்பதிலும் தவறில்லை. அன்யர்களுக்கு விட்டுக் கொடுத்துவிடவில்லை: தேசத்தின் எதிர்கால வாழ்வுக்குப் பங்கமில்லாதவரையில் விடடுக் கொடுக்கலாம்: சந்தேகம் அதில்தான் தட்டுகிறது.

முஸ்லிம்கள் கோருவது சிறுபான்மையினருக்குச் சலுகையல்ல. தாங்கள் வேறு ஜாதி என்கின்றனர்: தனி ராஜ்யம் வேண்டும் என்கின்றனர். மதம் மாறினால் ஜாதி மாறிவிடுமா? பல மதத்தினர் ஒன்றாக வாழ்ந்தால் மதத்திற்குப் பங்கமுண்டா? இக்கேள்விகளுக்குப் பதில் ஒன்றுதான் உண்டு. சொன்னால் சந்தேகம் வலுக்கிறதேயொழிய விலகவில்லை. சொல்லி லாபம் இல்லை. அறியாதவர்களை அணைத்துச் செல்ல வேறு வழி என்ன? உடன் வாழுவோருக்குப் பாதகம் இல்லாதவரையில் விட்டுக் கொடுக்கலாம். தனி ராஜ்யமா வேண்டும்? பிரதேச மக்கள் பிரியப்பட்டால் எடுத்துக்கொள்ளட்டும். தேசத்தின் கட்டும் கோப்பும் கலகலக்காமல் மாத்திரம் பார்த்துக்கொள்ளட்டும். சமஷ்டியொன்றுக்குக் கட்டுப்பட்டுச் சர்வசுவாதீனமாக வாழட்டும். காலக்கிரமத்தில் வேற்றுமைகள் தானாக மறையும்.

இந்த நம்பிக்கையில் சிலர் முஸ்லிம் லீகுடன் நெருங்கப்பார்க்கின்றனர். அன்னியாட்சியை விலக்கும் ஆர்வமே நம்பிக்கைக்கு வலுவூட்டி வருகிறது. வேறு விசை காணவில்லை, விட்டுக்கொடுத்து ஒத்துப்போகும் மனப்பான்மையை லீக் இதுவரையில் காட்டவில்லை. பிடிவாதம் பிடித்தால் கேட்பதெல்லாம் கொடுத்துவிடுவர் என்ற புத்தியே மேலோங்கி நிற்கிறது. சமூக நன்மையைக் காப்பதில் தேச நன்மை கண்ணுக்குப் புலப்படவில்லை. தேசநன்மையைக் காப்போர் எவ்வளவு தூரம் ஒரு சமூகத்திற்கு விட்டுக்கொடுக்க முடியும்? பிற சமூகங்கள் சந்தேகங்கொள்ளத் தலைப்படுகின்றன. விஷச் சக்கிரத்தின் விசையும் வீசசும் வலுக்கவே செய்யும்.

கௌன்ஸில் கூட்டத்தில் ஜனாப் ஜின்னா பேசியது தெளிவு காட்டவில்லை. பேச்சில் அவ்வளவு தடிப்பில்லை. அது ஒன்றுதான் ஆறுதலான அம்சம். ஆனால் காரியம் கூட வழிவிடவில்லை. பிரதேச வாரியாக வாக்கெடுப்பது மாறி, பிரதேசத்திலுள்ள மூஸ்லிம்களின் வாக்கு மாத்திரம் எடுக்க வேண்டும் என்கிறார். வாக்குக் கட்டுப்பாடு நடக்க இப்பொழுது உறுதி கூறவேண்டும் என்கிறார். சமஷ்டியொன்றுக்கு அடங்கி நடப்பதாகக் காணவில்லை. மத்திய கவர்ன்மெண்டுக்குப் பொறுப்பாட்சியென்றால், ஹிந்துக்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகும் என்கிறார். இந்தியர் என்றே உணர்வு இல்லை. மதமே பிரதானம். இடைக்கால கவர்ன்மெண்டில் பாதி பங்கு கேட்கிறார். பங்கு பெரிதல்ல; மனப்பான்மை கவலையளிக்கிறது.

ராஜாஜி இரண்டு மணி நேரம் ஜனாப் ஜின்னாவுடன் பேசியதாகச் செய்தி யொன்று கூறுகிறது. ராஜாஜியின் கவனமெல்லாம் ராஜி செய்வதில் திரும்பியிருக்கிறது. ராஜியில் எல்லோருக்கும் சிரத்தையுண்டு. வெகு தூரம் விட்டுக் கொடுக்கவும் தயாராயிருப்பர். ஆனால் எல்லையுண்டு: எல்லைக்கடங்கினால்தான் ஏறும். அதை மறந்தால் காரியம் கூடுவதற்குப் பதிலாகக் கெட்டுவிடும். ராஜாஜி அதை மறந்துவிட மாட்டார் என்று எதிர்பார்க்கிறோம். ராஜாஜியின் நிலை அபூர்வமானது. மகாத்மாவிடம் அந்தரங்கம்; ஜின்னாவுடன் அன்யோன்யம்; உள்ளத்திலே விடுதலை காணும் வேட்கை. கால பலம் கூடினால் காரியம் கூடிவிடும். கூடுமா?

## சென்றவார நிகழ்ச்சிகள்

(முன் பக்கத்தொடர்ச்சி)

கையில் பின் வருமாறு கூறினார்: "நமது தேசம் இவ்வளவு உறுதியுடனும் கட்டுப்பாடுடனும் இதற்கு முன்பு ஒருபோதுமிருந்ததே இல்லை. உள் நாட்டில் நமது கைத்தொழிற்சாலைகளை ரஷ்யாவின் கிழக்கு பாகங்களுக்கு மாற்றி, விவசாயத்தைப் பெருக்கி, தொழிலாளரது கட்டுப்பாட்டை அதிகரித்திருக்கிறோம்:

சென்ற குளிர்காலத்தில் செம்படை ஜெர்மனியரைத் தாக்கி 4 மாதங்களில் 250 மைல் முன்னேறியது: பிறகு ஜெர்மனியர் 2-ம் போர்முனை இல்லாததை அனுகூலமாகப் பயன்படுத்திக் கொண்டு நம்மைத் தாக்கி தென் மேற்கில் நமது படை வரிசையைப் பிளந்தனர். ஸோவியத் படைகளைச் சூழ்ந்து மாஸ்கோவுடன் யூரல் மலைக்கும் தெற்கிலுள்ள படைகளுக்கும் சம்பந்தமில்லாதபடி செய்து பின் மாஸ்கோவைத் தாக்குவதே தெற்கில் ஜெர்மனியரின் நோக்கமாகும். அச்சு நாட்டினர், எண்ணெய்ப் பிரதேசங்களை நோக்கி முன்னேறிய நோக்கம் அவற்றைப் பிடிப்பதல்லவென்றும், அது 2-ம் பக்ஷமான நோக்கமென்றும் தெரிகிறது: கிழக்குப் போர்முனையில் தங்களது ரிஸர்வ்படைகளை எல்லாம் திரட்டி வைத்ததால் ஜெர்மனியர் முன்னேற முடிந்தது; 2-வது போர் முனை இல்லாதிருந்ததால் அவர்கள் இவ்வேலையை அபாயமின்றி செய்ய முடிந்தது.

2-ம் போர்முனை ஏற்பட்டிருந்தால் ஜெர்மனி 60 டிவிஷன்களையும், அதனுடன் சேர்ந்த இதர நாடுகள் 20 டிவிஷன்களையும் அதற்குத் திருப்பிவிட்டிருக்கும். ஜெர்மன் ராணுவங்களது நிலைமை வருந்தத்தக்கதாக இருக்கும். 2-ம் போர் முனையில்லாததனால் ஜெர்மானியர் காப்பாற்றப்பட்டனர். ஜெர்மனி வசம் 256 டிவிஷன் படைகள் இருக்கின்றன. 179 டிவிஷன்கள் நம்மை எதிர்த்துப் போராடுகின்றன. இதல்லாமல் 22 ருமேனிய டிவிஷன்களும் 14 பின்னிஷ் டிவிஷன்களும் 10 இத்தாலிய 13 ஹங்கேரிய, ஒரு ஸ்லவேகிய ஒரு ஸ்பானிஷ் டிவிஷன்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. செம்படைகளை மொத்தம் 240 டிவிஷன்கள் எதிர்த்து நிற்கின்றன, நம்மிடம் தற்போது 30 லக்ஷம் சிப்பாய்கள் நூதன ஆயுதங்களுடனிருக்கின்றனர். முதலாவது மகாயுத்தத்தில் ஐரோப்பாவில் 2-வது போர்முனை இருந்தது. இந்த யுத்தத்தில் முதல் மகாயுத்தத்திலிருந்ததைவிட 2 மடங்கு அதிகமான படைகள் நம்மை எதிர்த்து நிற்கின்றன. அச்சு நாட்டுக் கொள்ளைக் கூட்டங்களது வெறி பிடித்த தாக்குதலை நம்மைத் தவிர வேறு எந்தத் தேசமும் எந்த ராணுவமும் எதிர்த்து ஜயித்திருக்க முடியாது. நமது படைகளது தீரத்தையும் கஷ்டங்களையும் நீங்கள் நினைத்துப் பார்க்கலாம்."

* * * *

### ஹிட்லர் பிரசங்கம்

சென்ற 8-ந் தேதி நாஸி புரட்சி ஏற்பாட்டின் ஆண்டு விழாவின் பொழுது ஹிட்லர் பின்கண்டபடி பேசினார்:—

1918-ம் வருஷத்திலேயே நாங்கள் வெற்றி அடைந்திருப்போம், ஆனால் அப்பொழுது ஜெர்மானியர்கள் அதற்கு அருகதையுடையவர்களாக இல்லை. யுத்தத்தை எங்கள் தாய்நாட்டினின்றும் அகற்றவே நாங்கள் இப்பொழுது போர் புரிகிறோம். எங்களது உள்நாட்டு விரோதிகளும் அந்நிய விரோதிகளும் எப்பொழுதும் போலவே இருக்கின்றனர். கெய்ஸர் சரண் புகுந்தார். நான் ஒருபொழுதும் சரண்புகமாட்டேன்.

### அட்டைப் படம்

"குவாரா பாப்" என்ற படத்தில் நடிக்கும் பிரதிமா தாஸ் குப்தா.

டோங்ரே பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

## சீவக சிந்தாமணி-21.



# காம திலகன்

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

★

இராசமாபுரத்தில் புரநகர்ச் சாலையில் இருந்த மகளிரும், தோழரும் சீவகனைக் காணாமல் வருந்தியிருந்தனர். அச்சமயம் சீவகன் அங்கே வந்து சேர்ந்தான். சீவகனுடைய கலியாணக் கோலத்தைக் கண்டு தோழர்கள், வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டனர்.

"ஐயனே, நீ மணம் செய்துகொண்ட மங்கையின் பெயர் என்ன?" என்றனர். "ஊடலிலும் இனியவள்; அரம்பை போன்றவள்; அவள் பெயர் விமலை" என்றான் சீவகன். அதைக் கேட்டவுடன், "ஐயன் மன்மதனே" என்று கூறிப் புகழ்ந்தனர் தோழர். அவர்கள் மொழியைக் கேட்ட புத்திசேனன் மறுத்துக் கூறினான்; "நண்பர்களே, பெற்றோர்கள் தமது பெண்ணை ஒருவனுக்குத் தாமாகவே மணம் செய்விப்பர். கணவனிடத்துக் குறை இருந்தாலும் மனைவி அதைக் கருதாமல் மனம் வருந்தியவளாய், அவனுக்கு அடங்கியே வாழ்வாள்; அதற்காக நீங்கள் வியக்க வேண்டாம். பருவம் முதிர்ந்த பெண்ணைப் பாவத்திற்கும் பழிக்கும் அஞ்சி ஒருவனுக்கு மனம் செய்விப்பர். அதுபோலவேதான், ஐயன் மணம் புரிந்ததும். ஆதலால், ஐயனைப் புகழ வேண்டாம்" என்று சொன்னான். சீவகன் அவ்வார்த்தைகளைக் கேட்டுப் புன்னகை செய்தான்.

"ஐயனே, நீ போகின்ற ஊர்களிலெல்லாம் மகளிரைக் கலியாணம் செய்து கொள்கிறாய். ஆனால், நீ, மணம் செய்துகொண்ட இந்நகரத்திலேயே ஓர் இளமங்கை இருக்கிறாள். அழகு நிறைந்தவள். நீ மணம் புரிந்த மகளிரைக் காட்டிலும் சிறந்தவள். ஆனால், ஆடவர், தன் மாளிகைக்கு அருகே சென்றாலும், அவர் பெயரைக் கேட்டாலும் உணவு உண்ணேன்; உயிரை விடுவேன் என்று விரதம் பூண்டு வாழ்கிறாள். மன்மதன் நேரில் சென்றாலும் கண்ணெடுத்துப் பாராள். அவளை நீ மயக்கினால், உனக்குக் காமதிலகன் என்று பெயர் கொடுப்போம்" என்று புத்திசேனன் கூறினான்.

"புத்திசேனா, நீ கூறிய இளமங்கையை யான் மயக்குகிறேன். அவ்வாறு செய்யேனாயின், சிறிதும் காதலில்லாத கன்னிப் பெண்ணைக் கூடியவன் ஆவேன். ஆதலால், அந்த மங்கையைக் காமன் கோயிலில் நாளைக்குக் கூடுவேன். காமன் வடிவத்திற்குப் பின், நீ, மறைந்து இரு" என்று கூறிச் சீவகன் புறப்பட்டான்.

'வாசனைப்பொடி காரணமாகத் தன்னோடும், குணமாலையோடும் பகைமை கொண்டு விரதம் பூண்ட சுரமஞ்சரியே, புத்திசேனனால் கூறப்பட்டவள்' என்று உணர்ந்தான். சுரமஞ்சரியின் அழகைப்பற்றி முன்பே கூறக் கேட்ட சீவகன் அவளிடம் விருப்பம் கொண்டான். அவள் வடிவத்தைத் தன் மனத்தில் ஒருவாறு கற்பனைசெய்து காதல் கொண்டான். 'சுரமஞ்சரியை அடைவதற்கு ஒரு முதிய அந்தணனாய்ச் செல்வேன்' என்று கூறி மாறுவேஷம்கொண்டான். "பாம்பின் தோல் போன்ற மேனி; வில்லைப்போல் வளைந்த கூன் உடம்பு. உத்தரியமும் பூணூலும் பிணங்கியாடும் மார்பு. நரை மூடியதும் புள்ளிகள் பொருந்தியதுமான உடம்பின் சாயல். கோணல் பார்வை. கண்டவர் அஞ்சத்தக்க உடல் நடுக்கம்: ஒரு கையில் கிழிந்த குடை; மற்றொரு கையில் ஊன்றுகோல்-இவ்வாறு மூப்பு வடிவத்தோடு புறப்பட்டான். மூப்பு வடிவத்தைக் கூறும் லக்ஷண நூலுக்குச் சீவகன் உதாரணமாக விளங்கினான். தன் மூப்பு வடிவத்தைக் கண்டு தானே மகிழ்ந்தான். ஊன்றுகோலை ஊன்றித் தள்ளாத கிழவனாய் அசைந்து நடந்து சுரமஞ்சரியின் மாளிகைக்குச் சென்றான். மாளிகையின் வெளிப்புறத்தில் வாயில் காவலர் காத்திருந்தனர். அவர்களுக்கு முன் நடுங்கிக்கொண்டே சென்று நின்றான் அந்தணன்.

"நீர், யார்? எங்கு வந்தீர்?" என்றனர் வாயில் காவலர். ஊன்றுகோலே பற்றுக்கோடாக, உடல் வளைந்து, நிலை தளர்ந்து இளைத்து நின்ற அந்தணன், தலையை நடுக்கிக்கொண்டே சொல்லலானான். "முன்பு, இளமைப் பருவத்தில் பால் கலந்த உணவையே உண்பேன்; இப்பருவத்தில் மகளிர் கொடுப்பவற்றை எல்லாம் அருந்துவேன்."

அந்தணன் இவ்வாறு சொல்லுவதைக் கேட்டு வாயில் காவலர் நகைத்தனர். 'நாம் வினவியதைக் கேளாமல், தம் பசியையே இவர் சொல்லுகிறார் ஆதலால் இவர் மிக்க பசி உடையவர் போல் தோன்றுகிறார். நாம் தடை செய்தல் பாவம்,' என்று அவர்கள் மனம் இரங்கினர். உடனே கைகுவித்து வணங்கி, "ஐயா, தாங்கள் உள்ளே செல்லுங்கள் உணவு கிடைக்கும்" என்று கூறிவழி விட்டனர். அந்தணன் தள்ளாடி நடந்து சென்று மகளிர் காவல் செய்யும் வாயிலை அடைந்தான். அந்தணனைக் கண்ட மகளிர் கோபம்கொண்டு ஓடிவந்து "ஐயா, இவ்விடத்தில் ஆடவர் தலை கூடத் தெரியக் கூடாது. விரைவில் ஓடிவிடுங்கள். இல்லையேல் உம் உயிருக்குத் துன்பம் உண்டாகும்" என்று கூறினர். அதற்கு மறுமொழி சொல்லாமல், அவர்கள் அருகில் சென்று நின்றான் அந்தணன். அவன் செய்கையைக் கண்ட மகளிர் விலகி நின்று மிகக் கோபம் அடைந்தனர். சில மங்கையர், கத்திகளைக் காட்டி அச்சுறுத்தினர். சில மகளிர், வில்லை வளைத்து அம்பைத் தொடுத்துப் பயமுறுத்தினர். வேலைக்காட்டி குத்திவிடுவேன் என்று கூறினர் சில மகளிர். அம்மகளிருக்கு நடுவில் அந்தணன் நடுங்கி நின்றான். அந்தணனின் முதுமைத் தன்மையைக் கண்ட சில மகளிர் மனமிரங்கினர், "தோழிகளே வேண்டாம் ஒன்றும் செய்யாதீர்கள். முதிய அந்தணனை வருந்தும்படிப் பேசாதீர்கள்; பாவம். நாம் தொட்டாலும் இவன் இறந்து விடுவான்; ஆதலால் அருகில் கூடப் போகதீர், சுரமஞ்சரிக்கு இவன் தன்மையைச் சொல்லி அவள் சொல்லியபடி செய்வோம்" என்றனர். உடனே மங்கையர் சிலர் சுரமஞ்சரியிடம் சென்று "தேவி, ஓர் அந்தணர், முதிய மூப்புடையவர், நம் மாளிகை வாயிலில் வந்துள்ளார். தொட்டாலும் இறந்து விடுவார் போல் இருக்கிறார். இனி நாங்கள் செய்யும் காரியத்தைச் சொல்லவேண்டும்" என்றனர்.

"முதிய மூப்புடையவனாயின் யானே வந்து பார்க்கிறேன். நீங்கள் முன்னே செல்லுங்கள்" என்று கூறிச் சுரமஞ்சரியும் அவர்கள் பின்னே சென்றாள். ஆடவரிடத்துக் கடுங்கோபம் அடைந்துள்ள சுரமஞ்சரி, அந்த அந்தணனின் முதிய மூப்பைக் கண்டதும் மனம் இளகினாள்.

"ஐயா நீங்கள், இங்கு வந்த காரியம் யாது?" என்று கேட்டாள். சுரமஞ்சரியின் அழகில் மயங்கிய அந்தணன் அவளை மயக்க உறுதி கொண்டான். 'சிந்தையில் நின்று என்னை வருத்து நின்ற அழகிய தன்மையையுடைய குமாரியாகிய உன்னைப் புணர வந்தேன்' என்னும் பொருள் படும்படி "இளமங்கையே சிந்தை நலிகின்ற திருநீர்க் குமரியாட வந்தேன்" என்றான் அந்தணன்.

'சித்தத்தில் நலிகின்ற தீர்த்த நீராகிய குமரி ஆற்றில் மூழ்க வந்தேன்' என்று அவன் சொன்னானாக; சுரமஞ்சரி கருதினாள் பின்னும் புன்முறுவலுடன் "ஐயா குமரியாற்றில ஆடுவதால் பயன்யாது?" என்று கேட்டாள்.

'உன்னைப் புணர்ந்தால் மூப்பு நீங்கிவிடும்' என்னும் பொருள் படும்படி "வரும் காலத்தில் வாராமல் வந்து வருந்துகின்ற இம்



மூப்பு நீங்கும்" என்றான். சுரமஞ்சரி அதைக்கேட்டுச் சிரித்தாள்; பின்னர் ஐயா, "குமரி ஆடி இளமை பெறுபவர் உம்மை ஒழியப் பிறர் யாரேனும் உளரா? இருந்தால்சொல்லும்" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

'நீ கொண்டுள்ள விரதத்தைக் கெடுத்துக் கூடும் வழி இம்மூப்பு வடிவால் என்பதை அறிந்து உன்னைக் கூடுபவர் என்னை ஒழிய வேறு எவரும் இலர்' என்னும் பொருள் படும்படி "துறை அறிந்து சேர்ந்து ஆடுகின்றவர் என்னை ஒழிய வேறு இல்லை" என்றான்.

"உலகத்தார், அறியும் துறை அல்லாமல், வேறொரு துறையை நீர் அறிவீரோ?" என்று கூறிச் சிரித்தாள் சுரமஞ்சரி.

"அதற்கு, ஐயம் இல்லை" என்றான் அந்தணன்.

"பட்டுப்போன மரம், பெரும் மழையால் தளிர்க்கும், என்கின்ற இவர், பெரும் பித்தர்; மிகவும் பசி உடையவர்; ஆதலால், இவர் பசியைத் தீர்ப்போம்' என்று கருதி அந்தணனைத் தன் மாடத்திற்கு அழைத்துச் சென்றாள். தோழியரை, இனிய உணவு ஆக்கிக் கொணரச் செய்தாள். உடனிருந்த மகளிர் அந்தணனுக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்தனர். அந்தணனை நீராடச் செய்து, புதிய ஆடையை அணிவித்து, இனிய உணவை அளித்து உபசரித்தனர். உணவுண்ட பின், வெற்றிலை தின்று, சேடியர் நடுவே வீற்றிருந்தான் அந்தணன். வேதியன் களைப்பு நீங்கினான் என்று அறிந்த சுரமஞ்சரி, "ஐயா. நீர் வல்லது யாது?" என்றாள். 'மறைந்தவழுவம் கொள்ளுதலில் யான வல்லவன்' என்னும் பொருள் படும்படி, "யான், மறைவல்லேன்" என்றான். 'வேதத்தில் வல்லவன்' என்று அவன் கூறினானாக அவள் எண்ணினாள், மேலும், 'வேதம், அனந்தசாகை உடையது; நீர், கற்ற எல்லை எவ்வளவு?" என்றாள் சுரமஞ்சரி, 'யான் நினைத்த காரியத்தைப் பெறும் அளவும்' என்னும் பொருள் படும்படி, "பொருள் எய்தி முடியும் வரையில்" என்றான். வேதம், தத்துவத்தை உணர்த்தி முடியும் அளவும்' என்று அவன் சொன்னானாக அவள் கருதினாள். "ஐயா, இக்கலைகளை எல்லாம் நீர் கற்ற காலத்தைச் சொல்லும்" என்று மீண்டும் கேட்டாள். சுரமஞ்சரியின் கேள்வி மேன்மேலும் பெருகுதலை எண்ணி, 'ஆஃது எனக்குங் கருத்து அன்று' என்னும் பொருள்படும்படி, "சிந்தையிலன்" என்றான். 'நினைத்திருந்திலேன்' என்று அவன் சொன்னானாகக்கருதினாள். "இந்த அந்தணனைப்போன்றவர் இவ்வுலகில் இல்லை" என்று புகழ்ந்தாள். பின்னர் அந்தணன் மேனியைக் கூர்ந்து பார்த்தாள். 'இனி, இவள், நம்மை வெளியே போகச் சொல்லுவாள்' என்று அந்தணன் எண்ணினான். உடனே தூங்குபவன்போல் நடித்துக் கண்களை மூடித் தலையை ஒரு பக்கமாகச் சிறிது சாய்ந்தான், 'அந்தணன் உறங்குகிறான்' என்று சுரமஞ்சரி பரிகசித்தாள். 'உன்மீது காதல் கொண்ட யான், வாடைக் காற்றால் வருத்துகிறேன்; அதனால் வருந்தும் தன்மையை அடைந்தேன்' என்றும் பொருள் படும்படி "காலும் மிகநோம்; கண்ணும் துயில்குற்றேன்? என்றான். 'வழி நடந்த களைப்பால் கால்கள் வலிக்கின்றன; கண்களும் உறங்கும்' என்று அவன் கூறினானாக எண்ணி மனம் இரங்கினாள். "ஐயா. இந்தக் கட்டிலில் உள்ள பூம் படுக்கையில் படுத்து உறங்கும்" என்று கூறித் தன் கட்டிலைக் காட்டினாள். அந்தணன் மெள்ளச் சென்று படுக்கையில் படுத்து உறங்குபவன்போல் நடித்தான், அப்போது சூரியனும் அத்தமன கிரியை அடைந்தான். உடனே வான வீதியில் நிலவை அள்ளித் தெளித்துப் பூரண சந்திரன் தோன்றினான்.

நிலவின் ஒளியால் வெள்ளி மாடம்போல் விளங்கியது அம்மாளிகை. வாசனைப் புகைகள் மாளிகை முழுவதும் நிறைந்து கமழ்ந்தன. மகளிர், பால் அன்னத்தை உண்டு, ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு, உவகையுடன் வீணை வாசித்தனர்; கட்டிலில் பூம் படுக்கையில் படுத்திருந்த அந்தணன், தான் நினைந்த காரியத்தை முடிக்க எண்ணி, மெள்ள மதுரகீதம் ஒன்றை இனிமையுண்டாகப் பாடினான். அருகில் வீணை வாசித்து இருந்த மகளிர், மெய்மறந்து அந்தணன் பாடிய பாட்டைக் கேட்டனர். மாளிகையில் அங்கங்கே பொழுதுபோக்கியிருந்த மகளிர், அந்தணன் பாட்டிற்கு மனம் உருகி, அவன் அருகில் வந்து அமர்ந்தனர். மகளிர் தன் வசப்பட்டதை அறிந்த அந்தணன், மேலும் மிக இனிமையுண்டாகும்படிச் சாமகீதத்தைப் பாடினான். மகளிர் அறிவிழந்து, அந்தணன் பாட்டில் மனம் ஒன்றி இருந்தனர். தனியே அமர்ந்திருந்த சுரமஞ்சரி, அந்தணன் பாட்டாகிய வலையில் அகப்பட்டாள். "காந்தருவதத்தையை இசைப் போரில் வென்ற சீவகசாமியின் பாட்டைப்போல் இருக்கிறது" என்று சுரமஞ்சரியிடம் தோழியர் கூறினர். பருவமங்கையாகிய சுரமஞ்சரிக்கு, அந்தணன் சாமகீதத்தால், சீவகனிடத்து வேட்கை பிறந்தது. வேட்கையால் மேனி பொரும, அணிகள் ஒலிக்க, அந்தணனிடம் விரைந்து ஓடி வந்தாள். சுரமஞ்சரியைக் கண்டதும் அந்தணன் பாட்டை நிறுத்தினான்.

"நங்காய், உடல் குலுங்க ஓடி வந்து என்ன செய்வது? யான் மிகவும் மூப்புடையவன்" என்று கூறி நகைத்தான். சுரமஞ்சரி அதைக் கேட்டு வெட்கம் அடைந்தாள். சட்டென்று திரும்பி தோழியர்களுக்குப் பின்னே நின்று பூங்கொம்பு போல் சாய்ந்து நின்றாள்.

"பெண்களே, இங்கு, என்னை அல்லாமல், ஓர் இளைஞனை நீங்கள் கண்டால் என்ன செய்வீர்கள்?" என்றான் அந்தணன்.

"ஐயா, நீர் கூறிய அவர் பெயரும் இவ்விடத்துக்கெடுக" என்று தோழி கூறினாள்.

"நீ, இவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன? இவளைக் கலியாணம் செய்து கொள்ளப் பேசினரா? அல்லது, இவள் வருந்தும்படி அவர்கள் ஏதேனும் செய்ததுண்டா?" என்றான்.

"சீவகன் எமது மங்கையின் வாசனைப் பொடியைக் குறை கூறினான். அதனால் ஆடவர் எல்லாரையும் இவள் கோபிக்கின்றாள்" என்றாள் தோழி,

"ஆம், இவளுக்குப் பகைவனாகிய சீவகன் இறந்திருப்பான்" என்றான் அவன்.

"இல்லை. சீவகன் நூறு ஆண்டுகளும் வாழ்க; ஐயன் பிழைத்தான்; அதை யாங்கள் அறிந்துவிட்டோம்" என்றனர் தோழியர்.

"என்ன? ஐயன் பிழைத்தது எப்படி? நீங்கள் அறிந்தது எவ்வாறு?" என்றான்.

"ஐயனுக்கு வந்த துன்பத்தைக்கேட்டு எம் தலைவி வருந்தினாள். பேசவல்ல ஒரு கிளியை அனுப்பி, காந்தருவதத்தையைக் கண்டு வரும்படி அனுப்பினோம். அவள் மகிழ்ச்சியோடு இருப்பதைக் கிளி வந்து சொல்லியது. அதனால் வருத்தம் நீங்கினோம்" என்றனர்.

அதைக்கேட்டு அந்தணன் புன்னகை செய்தான். மகளிர் அவனைச் சூழ்ந்து உட்கார்ந்தனர். "ஐயா, நீர் நன்றாகப் பாடுகிறீர். எம தலைவி, ஆடவரைக் காணேன் என்ற விரதத்தையும் விட்டு உம்மிடம் அன்பாயிருக்கிறாள் எமக்காக ஓர் பாட்டுப் பாடவேண்டும்; பாட்டைக் கேளாமல், உம்மை விடோம்" என்றனர். 'சுரமஞ்சரி,' தன்னுடைய அழகு முதலியவற்றைப் பந்தயமாக எனக்குத் தந்தால் பாடுவேன், என்னும் பொருள் படும்படி, "பாவை பொற்பே(ய்) பற்றி எமக்கு நல்கின் பாடுவேன்" என்றான். பொன்னாயிருப்பதொரு பேயைப் பிடித்துத் தந்தால் பாடுவேன், என்று அவன் சொன்னானாக மகளிர் கருதினர் "பேயைத் தேடிக் காண்பவர் யார்? அன்றியும், பொற்பேய் என்று இவர் கூறுவது உலகில் இல்லாத ஒன்று ஆதலால், இதற்கு உடன்படலாம்" என்று மகளிர் தமக்குள் பேசிக்கொண்டனர்.

அந்தணன் சூழ்ச்சியை அறியாத சுரமஞ்சரி, 'உலகில் இல்லாததை, ஒருவனால் காட்டமுடியாது; ஆதலால் இதற்கு உடன்படலாம், என்று எண்ணி, அதற்கு ஒப்புக் கொள்கிறேன்" என்றாள்.

"காமன் பாடிய கீதத்தை உனக்கு இனிய பாடுவேன்" என்று கூறிச் சுரமஞ்சரியை நோக்கியவண்ணம் பாடினான். அந்தணன் பாடிய பாடலைக் கேட்டுச் சோர்ந்து மயங்கிய மயிலைப்போன்றனர் மகளிர். சீவகனை எண்ணிச் சுரமஞ்சரி மனம் உருகினாள். அந்தணனைப் புகழ்ந்து, "நாளைக்குக் காமன் கோயில் சென்று வழிபட்டு, இப்பாட்டையுடைய சீவகசாமியைத் தர வேண்டுமென்று வரம் கொள்வேன்" என்று மகளிரிடம் கூறிக் கன்னிமாடம் சென்றாள். மகளிர் தத்தம் இடங்களுக்குச் சென்று உறங்கினர். அந்தணன், சுரமஞ்சரியின் நினைவோடு அமர்ந்திருந்தான்.

அடுத்த வாரம் :—

காமனை
வரம் வேண்டல்





உலகப் பிரசித்தி பெற்ற நிவாரணி

ஒவ்வொரு வீட்டிலும் அவசியமிருக்க வேண்டும்.

—::—

சரும தொந்திரவுகள், உபத்திரவங்களை ஜாம்-பெக் குணப்படுத்தும்.

வெட்டுக்காயம், சிராய்ப்பு, மற்றும் இதர கோளாறுகளுக்கு ஜாம்-பெக் அவசியம் வைத்திருக்கவேண்டும. புண்பட்ட இடத்தில் தடவினவுடன் அதன் அற்புத மூலிகை எண்ணெய் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்லதப்போக்கி, சருமத்திற்கு போஷாக்களித்து, தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1, பவுடர் ரூ. 1.

ஏஜண்டுகள்:- மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது

# வாடா மலர்

★

3

'அண்ணு' அதோ தெருவோடு போகிருளே, அவள் உடுத்தியிருக்கும் சேலையைப் பார்த்தாயா? எவ்வளவு அழகாக இருக்கிறது?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள், அண்டியோகஸின் தங்கை

அவள் சொல்லுவதற்கு முன்னமேயே அண்டியோகஸ் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டான், அவள் உயர்ந்த மஸ்லின் துணியொன்றை அணிந்திருந்தாள். மிகவும் மெல்லிய நூலால் நெய்யப்பட்ட அது, உடுப்பவர் உடலுடன் நன்ருக இசைந்து வேறுபாடே இல்லாமல் தோன்றும். அபமாதிரியே அது அந்தப் பெண்ணின் உடல் ஸௌந்தரியத்தை நன்ருக எடுத்துக் காட்டியது.

அழகு உள்ளவர்கள் தங்கள் ரூபலாவண்யத்தை மறைத்து வைக்கமாட்டார்கள். அதை வெளியே எடுத்துக் காட்டிப் பிறர் அதனைக் கண்டு மகிழ்வதில் அவர்களுக்கும் ஒரு திருப்தி உண்டாகும், இது மனித சமூகத்தின் மனோ தர்மம். அதேபோல அந்தப் பெண்—ஆம்—அவள் மிக்க எழில் வாய்ந்தவள்; தன் அழகைப் பிறர் பார்த்து மயங்குவதில் ஓர் ஆனந்தம் அடைந்து பெருமிதத்துடன் நடந்து சென்ருள்.

அந்தக் காட்சி அண்டியோகஸ் மனத்தே துன்ப உணர்ச்சிகள் பலவற்றை எழுப்பிவிட்டது; அடங்கிக் கிடந்த நெருப்பைக் கிளறிவிட்டது. அது கொழுந்து விட்டு ஜ்வாலையுடன் எரிய ஆரம்பித்தது.

தன் தங்கை தன்னிடம் எதற்காக அந்தச் சலலாத் துணியைப் பற்றிக் கேட்டாள் என்பதை அண்டியோகஸ் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொண்டான். அவள் அந்த மாதிரி துணி வேண்டும் என்று அவனைக் கேட்டு வந்தாள். சென்ற வருஷம் அவன் அந்தோனியாவுக்கு என்று வாங்கிக்கொடுத்தானே, அது முதலாகத்தான் வாங்கிக்கொடுக்கலாம் என்றுதான் ஒரு சமயம் எண்ணியிருந்தான்.

ஆனால் இப்போதோ அந்த யோசனை உண்டாகவே போவதில்லை அந்தத் துணியைப்பற்றிய பேச்சே அவனுக்கு வெறுப்பாக இருந்தது. ''சீச்சி, புத்தி போயிற்றே உனக்கு'' என்று தன் தங்கையைப் பார்த்து எரிந்து விழுந்தான் அவன்.

அவன் தங்கைக்கோ, அப்படிப்பட்ட மெல்லிய சல்லாத் துணியைத் தனக்கு வாங்கிக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுவதுடன் நில்லாமல், அவ்விதம் கேட்டதற்காகத் தன்னைக் கடிந்து கொள்வதைக் கண்டதும் கோபம், துக்கம், ஆத்திரம், அழுகை முதலிய எல்லாம் கலந்து வந்தன.

ஆனால் அண்டியோகஸோ அதனுடன் நிறுத்திவிடவில்லை.

''குடும்பப் பெண்களும், குலமகளும் கட்டிக்கொள்ளத் தகுதி வாய்ந்த துணியா? மானத்தை விலைபேசி, உடலை விற்று வாழும் பெண்கள் தங்கள் தேக ஸௌந்தரியத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்காக உபயோகிக்கும் சல்லாவன்ரோ அது.''

## முன் கதைச் சுருக்கம்

பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் சாத்தன்: வெளி நாடுகளுடன் வர்த்தகம் நடத்தி வந்தான் அவன். ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்ற முதுரையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தவன். யவன தேசத்திற்கு அடிக்கடி சென்று வந்தான். அவன் பார்ப்பதற்கு வசீகரத்தோற்றம் உள்ளவன்: அலக்ஜாந்திரியாவில் அவன் ஒருத்தியைக் கண்டான்: அது முதற்கொண்டு அவனது உள்ளம் அவளிடத்தே ஈடுபட்டு விட்டது. அங்கு அண்டியோகஸ் வீட்டில் தான் கொணர்ந்த பொருளை விற்க விலை பேசுகையில் அழகு மிகுந்த அந்தோனியாவை அவன் கண்டான். இருவரும் ஒரு க்ஷணம் ஒருவரையொருவர் நன்கு நோக்கினர். வெகு சீக்கிரத்தில் இருவரிடையே அந்நியோந்நியம் பிறந்து விட்டது. அவள் ஞாபகமாகவே சாத்தன் தாயகம் திரும்பினன். அவனுக்கு அவளை எப்போது மறுபடி காண்பது என்பதே ஏக்கம்: அவளுக்கு அவன் எப்போது திரும்பி வருவான் என்பதே விசாரம்.

கதையை மேலே படியுங்கள் —

இதைக் கேட்டவுடன் அவளுக்குப் பொறுக்கவில்லை. துக்கம் தொண்டையை அடைத்து பேசமுடியாமல் திணற அடித்தது. அவள் உடலிலும் ஒரு படபடப்பு ஏற்பட்டது.

''ஆமாம், நான் கேட்டால் தான் இப்படி. போன வருஷம் அந்தோனியாவுக்கு வாங்கிக் கொடுத்தாயே? அவள் யார்? குடும்பப் பெண்ணு, பரத்தையா? இல்லாவிட்டால் அவள் உடுத்திக் கொள்ளலாம். ஏனென்ருல், புரோகியூரேடர் பெண், நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினய். இப்போது தெரிந்தது உன் மனத்தில் உள்ள நினைப்பு:

இதைச் சொல்லிவிட்டு அவள் அந்த இடத்தில் நிற்கவில்லை. விடுவிடென்று வீட்டினுள்ளே போய்விட்டாள்.

அண்டியோகஸ் எந்த விஷயத்தை மறக்க முயன்ருனே அது அவன் முன்னே வந்து நின்றுவிட்டது. அவள் அந்த மஸ்லின் துணியை அந்தத் தமிழன் சாத்தனிடமிருந்து விலைக்குப் பெற்று அந்தோனியாவுக்குப் பரிசாக அளித்த அந்த நாளை அண்டியோகஸ் என்றைக்கும் மறக்க முடியாது.

அந்தோனியா அந்த மஸ்லினை உடுத்தி வந்தவுடனே, அவன் தன் கண்ணால் கண்டதையே நம்பவில்லை. அவள் அழகு அப்படிச் சோபித்தது. அந்தோனியாவை அந்த அலங்காரத்தில் பார்த்து மயங்காதவர்களே இல்லை. சாத்தனுக்கும் அது புது அனுபவமாக இருந்தது. அவளையே இமை கொட்டாமல் பார்த்தான்.

## புதிய தொடர்க்கதை

அதைக் கவனித்த அந்தோனியாவுக்குச் சிறிது வெட்கம் உண்டாயிற்று; நாணித் தலையைக் கவிழ்ந்து கொண்டாள். சாத்தனும் தன் திகைப்பை மறைக்க முயன்ருன். ஆனால் முடியாமல் திணறினன். அண்டியோகஸோ கண்களில் கோபத்தால் பறக்கச் சுடெரித்து விடுவதே போலச் சாத்தனைத் தீக்ஷண்யமாகப் பார்த்தான்.

அந்தத் துணியே தனக்குச் சத்துருவாகப் போய்விடும் என்பதை அவன் அப்போது அறியான்.

அந்தோனியா இவ்விதம் செய்வாள் என்று அண்டியோகஸ் கனவிலும் நினைக்கவில்லை. அவள் அந்தத் தமிழன் சாத்தனுடன் ஓடிவிட்டாள். அது நிகழ்ந்து பதினைந்து தினங்களாயினும், அவனுக்கு அதுவரையில் தெரியாது அவன் காதுகளுக்கு எட்டக்கூடாது என்று ரகசியமாக ஒளித்து வைக்கப்பட்டிருந்ததா? எப்படியோ முதல் நாள் இரவு தான் அதனை அறிந்தான் அவன்.

அப்பால் அவன் தூங்கவே இல்லை. ஏக்கமே உருவெடுத்தவன் போல் அங்குமிங்கும் அலைந்தான். படுக்கையில் படுத்தால் பழைய ஞாபகங்கள் ஒவ்வொன்ருக அவன் மனக்கண்முன் எழுந்தன. அந்தோனியாவின் மனத்தைக் குளிரவைக்க-ஆம், அவளைத் தன் வசப்படுத்த-அவன் என்ன என்ன சாமான்களை அவளுக்கு வாங்கிக் கொடுத்தான்! தந்தச்சிப்பு, ஸ்படிகக் கண்ணாடி, மஸலின் புடவை, பட்டுத் துணி, சந்தனக் கட்டை, அகில் முதலிய வாசனைச் சரக்குகள் இன்னம் விளையாட்டுச் சாமான்கள் எவ்வளவோ? ஒவ்வொன்றையும் யானைவிலை குதிரை விலை கொடுத்து வாங்கவேண்டியிருந்தது. ஆம், அவன் சொத்தில் பாதிக்குமேல் அப்படி கழிந்து விட்டதே.

அவ்வளவு செய்தும், அவள் அண்டியோகஸுக்கு நன்றி செலுத்தினளா? இல்லை அம்மட்டிலோ, தன்னுடைய அந்தஸ்து, மரியாதை, குலப்பெருமை முதலியவற்றைத் துறந்து. ஊர் பேர் தெரியாத அந்த நாடோடி வியாபாரி யாரோ ஒருவனுடன் ஓடிவிட்டாளே... விழலுக்கிறைத்த நீராகவன்ரோ போயிற்று அவன் வாரியிரைத்த பணம் முழுதும்.

அந்தோனியாவை இழந்ததைக் காட்டிலும். தன் பொருளை இழந்த துக்கமே அண்டியோகஸை அதிகமாக வாட்டியது போலும்! வீண் விரயம் செய்யாமல் சேர்த்து வைத்திருந்தால். அந்தப்பணம் இப்போது எவ்வளவு அதிகமாக இருந்திருக்கும் என்பதை எண்ணியே மருகியது அவன் உள்ளம்.

அந்தோனியாவின் நடத்தையால் அவமானம் அடைந்தவர்கள் வேறு சிலரும் இருந்தனர். அவருடைய தந்தையைத்தான் எடுத்துக்கொள்ளலாமே. போண்டியஸின் செல்வாக்குக்கும் பதவிக்கும் அது ஓர் அழியாக் கறையாகவே போய்விடவில்லையா? அன்றி, ரோம் ஸாம்ராஜ்யத்துப் புரோகியூரேடரின் பெண் ஒருத்தியைப் பரதேசி ஒருவன் அடித்துக்கொண்டு ஓடிவிட்டான் என்ருல் அது அவர்கள் சமூகத்துக்கே இழுக்காகாதா?

எனினும் அவன் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அகப்பட்டுக்கொண்டான் தன்படகுகளை மிதக்கவிட்டு, உதவிக்குத் தேவையான போர் வீரர்களையும் அழைத்துக்கொண்டு அவர்களைத் துரத்திச் சென்று மடக்கி அவளைப் பிடித்துக்கொண்டு வரவும் முடியாத நிலைமையில் இருந்தான். அவர்கள் புறப்பட்டுப் பதினைந்து தினங்கள் ஆகிவிட்டன.

ஒருகால் வழியில் ஏதாவது தெய்வ சங்கல்பத்தால் அவர்கள் பிரயாணம் தடைப்பட்டு இருக்கலாகாதா என்ற சபலத்துடன் முயன்று பார்க்கலாம் என்ருலும் காற்று திசை மாறிவிட்டது. மறுபடியும் நல்ல காற்று வரப்போகும் நாளை எதிர்பார்த்து, குறைந்தது. ஆறுமாதகாலமாவது அவன் காத்திருக்கவேண்டியதுதான். வேறு வழியில்லை,

யவனமக்கள் தவறிழைக்கமாட்டார்கள். ரோம் ஸாம்ராஜ்யத்தைச் சார்ந்தோர் யாவரும் இதனை திடமாக நம்பி வந்தார்கள். அதனுல் அந்தோனியா இழைத்த பிழைக்குச் சாத்தனே பொறுப்பாளி என்று அண்டியோகஸ் நிச்சயமாக எண்ணினன். அவளைக் குறைகூற அவன் மனம் ஒருப்படவில்லை. சாத்தனையே நிந்திக்கத் துவக்கினன்.

## தி. நா. சுப்ரமணியம் எழுதியது

சாத்தன் மீது, ஏற்பட்ட கோபம் படிப்படியாக அதிகரித்தது. எல்லையைத் தாண்டித் தமிழர்கள் மீது பாய்ந்தது. தனிப்பட்ட ஒருவன்செயலுக்கு அவனை ஈன்ற சமூகம் பொறுப்பேற்க வேண்டுமா?

'தமிழ்ப்பூண்டே' இல்லாமல் செய்துவிட வேண்டும்' என்று தீர்மானித்த அண்டியோகஸ் அதை முடிப்பதற்கான வழிகளைத் தேட ஆரம்பித்தான். தமிழ்நாட்டு வியாபாரிகளைப் பற்றிய விஷமமான செய்திகளை மக்களிடையே பரப்ப தலைப்பட்டான்

அலெக்ஜாந்திரியா ஸாம்ராஜ்யத்தின் முக்கியமான நகரங்களுள் ஒன்ருகத்தான் இருந்தது. ஆயினும், நிர்வாகத்தை ஆட்டி வைத்தவர் ரோம் நகரிலே வசித்து வந்தார்கள். வெளியூர்



களிலிருப்பவர்கள் புதிய யோசனை எதைச் சொன்னுலும், தலை நகரத்திலிருந்து அங்கீகாரம் வராவிட்டால், அது முடிகிற காரியமாகுமா?

அண்டியோகஸ் அலெக்ஜாந்திரியாவை விட்டு ரோம் நகரத்துக்குச் சென்ருன். அங்கே இருந்த ஸாம்ராஜ்யத் தலைவர்களை அடிக்கடிப் போய்ப் பார்த்துத் தன் காரியத்துக்கு அடிகோலி வந்தான்.

'சந்தனக்கட்டை, மிளகு, கிராம்பு, முதலியவை இல்லாமல் நம் முன்னோர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தவில்லையா? அவர்களைப்போலவே நாமும் வாழ முடியாதா? அப்படி அவை அத்தியாவசியமானவைகளாக இருக்குமாயின் நாம் ஏன் அவற்றைப் பயிரிடக்கூடாது? நம் நாட்டில் அவை வளராவாயின், அவை பயிராகக்கூடிய நாட்டை நாம் ஏன் கைக்கொள்ளலாகாது?'.

இவ்விதம் அண்டியோகஸ் வாதம் செய்து பார்த்தான். அவனுடைய கட்சியை நன்ருக எடுத்துச்சொல்லப் பலர்முன் வந்தனர். கூலி வாங்கிக் கொண்டு, அவன் வாதத்தை அழகிய மொழியில் பல காரணங்களுடன் வேகம் தொனிக்க எழுதிக் கொடுக்க எழுத்தாளர் பலர் காத்திருந்தனர் காசாசை கொண்ட அவர்கள் எழுத்தின் விறுவிறுப்பு வாசிப்பவர் சிறிதும் எதிர்க்க முடியாதது.

தமிழ்நாட்டு வாணிபத்தால் யவன ஸாம்ராஜ்யம் வருஷவாரி அடைந்துவரும் நஷ்டத்தை அவர்கள் சுலபமாக எடுத்துக் காட்டினுர்கள். நெருப்புப் பட்டால் கரிக்கட்டியாக மாறும் வைரம், வைடூரியம் முதலிய கற்களைக் கொடுத்துவிட்டு, ஏராளமான தங்கத்தை வாரிச் செல்லும் அந்த வாணிபத்தை அவர்கள் பகற்கொள்ளை என்றே வருணித்தார்கள். நாகரீகமற்ற ஜனங்கள் வாழும் அந்த நாடுகளை யவன ஸாம்ராஜ்யத்தில் சேர்த்து விட்டால் அதனுல் ஸாம்ராஜ்யத்துக்கு ஏற்படக்கூடிய லாபங்களை விவரித்துக் கூறினுர்கள்.

''ஸாம்ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கருதினுல், இப்போது உள்ள நிலைமை மாறியாகவேண்டும். இந்த விதமாக நடந்து கொண்டிருந்தால் நம்முடைய சுதந்திர வாழ்வின் அந்தியகாலம் சமீபித்து விட்டது என்றே சொல்லலாம். என்று முடிவடைந்த அவர்கள் கட்டுரைகளைப் படித்தவர்கள் பயத்தையும் பீதியையும் அடையாமல் வேறு என்ன சொல்ல முடியும்? மக்களின் மனோ நிலையைப் பக்குவப்படுத்தித் தமிழ் நாட்டின் மீது போர் தொடுக்க ஆசை கொண்டான் அண்டியோகஸ். அதனுல் அவனுக்கு எத்தனையோ அனுகூலங்கள் கிட்டும்.

படையெடுப்புக்கு அவனே தலைமை பூண்டு செல்லலாம், வெற்றி கொண்டால், கைப்பற்றிய பிரதேசங்களுக்கு அவனே அதிபதியாகவும் ஆகலாம். ஸாம்ராஜ்ய நிர்வாகத்துக்கு ஏதோ வருஷவாரியில் கொஞ்சம் திறைப் பணத்தையும் ரோமாபுரியில் இருந்த ஸாம்ராஜ்யத் தலைவர்களுக்குத் தேவையான கைக்கூலியையும் கொடுத்து விட்டால், அப்பால அவனைப்பற்றி யார்கவலை கொள்ளப் போகிருர்கள்? அவன் யதேச்சாதிகாரம் நடத்தினுலும் அதைப்பற்றி ஒருவரும் காதில் போட்டுக்கொள்ளமாட்டார்கள்.

ஆம். அவன் முன்னர் அந்தத் தமிழனிடம் இழந்த பொருள்களைப் பத்து மடங்காகத் திரும்பப் பெறலாம்.

அதுமட்டுமன்று. அந்தோனியாவை மறுபடியும் கைப்பற்றி விடலாம் என்ற சபலமும் அவனுக்கு உண்டு. அதுவே முக்கிய காரணம் என்றும் கூறலாம்.

அண்டியோகஸ் பணத்தைப் பணம் என்று மதியாமல் வாரி இறைத்தான், அவன் ஆசையின் முதற் படியைத் தாண்டிவிட்டான். ரோம ஸாம்ராஜ்யத்தின் மக்கள் பெயரளவிலேயே ஆதிக்கம் புரிந்து வந்தவர்களாயினும், தமிழ் நாட்டுப் படையெடுப்பை அங்கீகரித்தார்கள். படையெழுச்சிக்கான ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெறலாயின.

அங்கே இவ்விதம் இருக்க, தமிழ் நாட்டிலே: நகர் முழுதும் ஒரே குதூகலமாக விளங்கியது. எங்கே பார்த்தாலும் ஜனத்திரள் நிரம்பியிருந்தது. ராஜ வீதிகளிலும், கோயிலுக்குள் செல்லும் பாதைகளிலும், வித்தை காட்டிகளும் வேடிக்கை பார்ப்பவர்களும் சிறு சிறு கூட்டங்களாக நின்றிருந்தனர். தின் பண்டங்களையும் விளையாட்டுப் பொம்மைகளையும் காட்டிச் சிறுவர்களை இழுத்துத் தங்கள் பொருள்களை விற்றுக் காசு முடியும் சில்லரை வியாபாரிகள் ஓரிடத்தில் நில்லாமல் அங்கங்கே திரிந்து வந்தனர்.

அன்றைக்குச் சொக்கநாதர் கல்லானைக்குக் கரும்பு அளிக்கும் திருநாள், பொழுது விடிந்ததிலிருந்தே மக்கள் தங்கள் வேலைகளை விட்டு, அன்றைத் தினத்தை உல்லாசமாகக் கழிக்கத் தயார் செய்துகொண்டு கிளம்பிவிட்டனர். சொக்கநாதரைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்ட பாண்டிய மன்னனும் உத்ஸவத்தை உடனிருந்து நடத்தி வைக்கப் பெருமானுடன் பவனி வருவான். அந்தக் காட்சியைப் பார்க்க நாட்டின் நாலு பக்கங்களிலிருந்தும் மக்கள் தலை நகருக்கு வந்து கூடிவிட்டனர்

அந்தக் கூட்டத்தில் அவள் ஒரு தனியாகவே விளங்கினுள். அவளுடைய மேனி நிறம் தேகக்கட்டு, முகவெட்டு, நடை, உடை ஆகிய எல்லாம் வேருகவே இருந்தன. அதைப் பிறர் உணர்ந்தார்களோ இல்லையோ, அவள் உணர்ந்துவிட்டாள். எங்கே திரும்பினுலும் கூட்டத்தில் உள்ளவர்கள் தன்னையே கூர்ந்து கவனிப்பதைக் கண்டாள் அவள், அது உண்மையா அல்லது மனப்பிரமையா?

அந்தோனியா முதலில் அதைக்கவனிக்கவில்லை. மனித சமூகத்தின் அலைகளால் உந்தித் தள்ளப்பட்ட அவள், கும்பலுள் ஒருத்தியாகக் கலந்து அதனுடன் போய்க்கொண்டிருந்தாள் எறும்பு ஊரும் வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது அந்தக் கூட்டம்.

'அவள் யார்?'

பின் புறத்திலிருந்து உண்டான அந்தப் பெண் குரலை அவள் முதலில் கவனிக்கவில்லை. 'யாரோ யவனச்சேரியிலிருந்து வந்தவளாக இருக்கும்' என்று மற்ருெருத்தி முதலில் கேட்டவனுக்கு பதில் சொன்னுள்.

'யவனச்சேரி' என்ற சொல்லைக் கேட்டதும்தான் அந்தோனியா திடுக்கிட்டாள்.

அவர்கள் தன்னைப்பற்றியே பேசுகிருர்கள் என்பதை உணர்ந்தாள். அதனுல் அவர்கள் யார் என்பதை அறியத் திரும்பிப் பார்த்தாள்.

யாரோ நாட்டுப்புறத்து பெண்கள் அவ்விருவரும். அந்தக் கும்பலில் அவர்களைப்பற்றி வேருென்றும் அதிகமாக அறிய முடியவில்லை. அவர்களை குறிப்பாகப் பார்த்துக் கொள்ளவும் அந்தோனியாவால் முடியவில்லை. அன்றி, அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்பதையும் அவளால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்தோனியாவுக்குத் தமிழ் பேச்சு நன்ருக வரவில்லை. அவர்கள் பேச்சில அங்கொன்றும் இங்கொன்றுமாகவே அவளுக்குப் புரிந்தது.

ஆனல் அவர்களுடைய முகபாவத்தைக் கொண்டு அவர்கள் பேசியது என்னவாக இருக்கும் என்பதை யூகித்துக்கொண்டாள்.

அது அந்தோனியாவின் மனத்தே ஈட்டிபோலப் பாய்ந்து துன்புறுத்தியது. அவளால் அங்கே நின்று வேடிக்கை பார்க்க முடியவில்லை சந்தோஷத்துடன் திருவிழா பார்க்க சென்ற அந்தோனியா பிளந்த ஹிருதயத்துடனும் வாடிய முகத்துடனும், திருவிழாவைப் பார்க்காமலே வீடு திரும்பினுள்.

(தொடரும்)


# உங்களுக்கு சோப் கொண்டு வருகிறுன்



சாதாரண சந்தர்ப்பங்களில் சோப் ஒவ்வொரு வீட்டிலும் உபயோகப் படுத்துகிறவர்களுக்கு ரயில் மார்க்கமாகவோ, லாரிகள், கட்டைவண்டிகள், ஒட்டைகள் முதலியவைகளின் மார்க்கமாக வந்துகொண்டிருந்தது. நாமும் எல்லாவற்றையும் தெரிந்திருந்தோம்.

யுத்தத்தின் பொருட்டு ரயில்வேக்கள் வெகுவாக உபயோகிக்கப் படுகின்றது. பிரயாணங்களைக் குறைத்தல் அவசியம். தேசத்திற்கு வேண்டிய சரக்குகளைக் கொண்டுபோக ரயில்வேக்களில் அதிக இடம் தேவையாய் இருப்பதால் சரக்குகள் போக்கு வரத்தில் தடை ஏற்படுகிறது. அவசியமான காரியங்களுக்கு பெட்ரோல் தேவையாயிருப்பதால் லாரிகளிலாவது, மோடார் வண்டிகளிலாவது, சரக்குகள் அனுப்புவது முடியாத காரியம்.

ஆகையால் நாளுக்கு நாள் உங்களுக்கு அருகாமையில் இருக்கும் கடையில் உங்கள் பிரியமுள்ள சோப் சில சமயங்களில் ஸ்டாக்கில்லாம லிருக்கலாம். தேவை மிகவும் அதிகமாக ஆக தாமத மதிகரிக்கிறது. சரக்குகள் தயாரிப்பவர்கள் தங்களால் முடிந்த அளவு தயாரித்தும், அனுப்புவதற்கு வேண்டிய எல்லா சாதகங்களையும் அனுசரித்தும் வருகிருர்கள். எளிய மிகவும் உபயோகமுள்ள துவிச்சக்கர வண்டிதான் மிகவும் உதவுகிறது.

உங்களிடம். சரக்குகளின் குறைவு ஏற்பட்டாலும—தயாரிப்பவர்கள்—ரயில்வேக்கள்—வினியோகஸ்தர்கள் முதலானவர்கள் தங்களால் இயன்றளவு பாடுபடுகிருர்கள் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். நிலைமை சாதாரணமாகும் வரையில் மற்ற காரியங்களுடன் சோப் அனுப்புதல் யுத்தத்தின் காரணமாக கஷ்டப்படவேண்டி இருக்கும்.

பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து

லீவர் பிரதர்ஸ்

(இந்தியா) லிமிடெட்

பிரசுரித்தது

சன்லைட் சோப் — லைப்பாய் சோப் — லக்ஸ் டாய்லெட் சோப் — லைப்பாய் டாய்லெட் சோப் — லக்ஸ் — விம் — மங்கி பிராண்டு

L. Com. 13-169 TM

# புதிய உலகம்

## ஒரு மராத்திக் கதை

* ஸ்ரீ வி. ஸ. காண்டேகர்
எழுதியது

சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். அந்த அஸ்தமனச் சூரியனைக் கண்டு வாமனனுக்குத் திடீரென்று மரணத்தின் ஞாபகம் வந்தது. அஸ்தமிக்கும் அந்தச் சூரிய பிம்பத்தை இடையிலேயே ஒரு மேகத்திரள் வந்து மறைத்துவிட்டது. 'தூக்கிலிடும்போது கைதியின் முகத்தைக் கறுப்புத் துணியால் மூடிவிடுவார்கள்' என்று வாமனன் ஏதோ ஓரிடத்தில் படித்திருந்தான். இதுவும் அந்தக் காட்சி போலவே அவன் கண்களுக்குத் தோற்றியது. அந்த ஞாபகம் வந்தவுடனே அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

மரணம்-தூக்குத் தண்டனை—ரமணீயமான சாயங்கால வேளையில், இவ்விதம் பயங்கரமான எண்ணங்கள் தன் மனதில் ஏன் வட்டமிடுகின்றன என்பது அவனுக்கே ஒரு நிமிஷம் வரையில் புரியவில்லை. பேய் பிசாசுகள்கூடக் காரிருளில்தான் சஞ்சரிக்குமாம்! அப்படியிருக்க வயது இருபதுகூட நிரம்பாத அவன்போன்ற ஓர் இளைஞனின் இதயத்தில் இப்படிப்பட்ட சோர்வான எண்ணம் பரவுவதேன்? அவன் மனம், பயங்கரமான இந்தக் கனவிலிருந்து விழித்துக் கொள்ள முயன்றது.

அந்த மனம் சொல்லிற்று: 'மாலைவேளை எப்போதுமே அழகாகத்தான் இருக்கும், நான் ஐந்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, சாயங்காலமானதுமே பாலகவியின் அந்த மதுரமான கானத்தை ஓயாமல் முணுமுணுத்துக் கொண்டிருப்பேனே!-எத்தனை மோகனமான கற்பனை அது! சூரியன் ஸந்தியாவின் அந்தப்புறத்துக்குள் போயிருக்கிறான், அங்கே—'

வாமனன் அந்தப் பாட்டை எவ்வளவோ ஞாபகப்படுத்திப் பார்த்தான். ஆனால், பழைய போட்டோவைப் போலத் தன் மனப் பாடம் மங்கிப்போயிருந்ததை அவன் உணர்ந்தறிந்தான். அவன் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டு, நான் மெட்ரிகுலேஷன் பாஸ் செய்து மூன்று வருஷங்களாயின. நாலு நாட்கள் மோட்டார் தொழிற்சாலையில் குமாஸ்தாவாகவும், நாலு நாட்கள் பால் சப்ளைசெய்யும் ஸொஸைட்டியில் காஷியராகவும் இருந்ததுபோக, மீதி நாட்கள் வேலை கிடைக்கவில்லையே என்ற கவலையில் கழிய —இப்படி இந்த மூன்று வருஷங்கள் தாண்டிச் சென்றன. இந்த உலகத்தில் காவியம் ஒரு முறை பாடம் செய்வதால் மட்டும் வந்துவிடாது. அதை அடிக்கடி திருப்பிப் படிக்க வேண்டும். ஆனால் நான் தான் மூன்று வருஷகாலமாக ஒரே விஷயத்தை உருப்போட்டுக் கொண்டிருந்தேனே-வேலை; காயமான வேலை; டெம்பரரியான வேலை; எங்கேயானாலும் சரி; எந்த வேலையானாலும் சரி; ஆனால் அது இருபத்தைந்து ரூபாய் குமாஸ்தா உத்தியோகமாக இருக்கவேண்டும்—' என்று சொல்லிக்கொண்டே நடந்தான்.

ஆனால், இந்தக் காலத்தில் வேலையென்பது ஆகாயத்திலுள்ள சந்திரனைப் பிடிப்பது போன்றது என்பதை அவனும் தன் அநுபவத்தில் கண்டிருந்தான். பல்லைக் காட்டிக் கெஞ்சி இங்கிருந்தும் அங்கிருந்தும் சிபார்சுக் கடிதங்கள் வாங்கி வந்து, வேலைக்காக அவன் எத்தனையோ முயற்சிகள் செய்தான். ஆனால், அவன் எந்த எந்தக் குளங்களில் தன் குடத்தை மிகவும் ஆசையோடு அமிழ்த்தினானோ, அந்தக் குளங்களிலெல்லாம் கட்கட வென்ற ஓசைதான் அவன் காதில் விழுந்தது. உள்ளங்கையளவு நீராவது தன் குடத்தில் நிரம்பும் என்ற பைத்தியக்கார எண்ணத்தோடு, அவன் பல தடவைகள் அந்தக் குடத்தைக் குளத்துப் பாறைமீது ஓங்கி வீசினான், குடம் முழுதும் ஒரே ஓட்டை மயமாகப் போனதுதான் அதன் முடிவு.

அவன் மனதில் ஓட்டைகளை உண்டாக்கிய சில வாக்கியங்கள் வருமாறு:—

'மெட்ரிகுலேஷன் பாஸ் செய்த மனிதன சுகமாக வாழ ஏன் முயலவேண்டும்'?

'உனக்கு நாலு அல்ல: நாற்பது தம்பி-தங்கைகள் இருக்கலாம்; அதற்கு நாங்கள் என்ன செய்ய? இந்த விஷயத்தில் உன் தாய் தகப்பன்மார் கவலையெடுத்துக்கொண்டிருந்திருக்கவேண்டும்!'

'மனிதனாகப் பிறப்பது பெரிய பாவமடா, பையா! நீ அழகிய குதிரையாகப் பிறந்திருந்தாயானால், வெள்ளிப்பிடி போட்ட பையில் உனக்குப் பச்சைக் கடலை தின்னக் கிடைத்திருக்கும்! குச்சுநாயாகப் பிறந்திருந்தாயானால், சினிமா நடிகையின் ஜார்ஜெட் புடவை மேல் உருண்டு விளையாடும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கும்! நீ மனிதனாகப் பிறந்தது மிகப் பெரிய குற்றம். அதிலும் ஏழ்மையோடு போராடி மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தாயே, இது மாபெருங் குற்றமாகிவிட்டதே. நீ செய்த குற்றத்துக்கு இந்தத் தண்டனை குறைவானது!'

இது ஒரு பைத்தியக்காரக் கிழவன் பேசிய பேச்சு! ஆனால் அவன் சொன்ன ஒவ்வொரு வாக்கியமும் வாமனனுக்கு அடிக்கடி ஞாபகம் வரும்.

வாமனன் எதிரே பார்த்தான். சூரிய பிம்பம் அக்கரையில் மறைந்து போய் விட்டது. அவன் நினைத்தான்: 'உலகத்தில் வாழவேண்டுமென்ற என் ஆசையும் இப்படித்தான் அஸ்தமித்துப் போய்விட்டது. நான் இனி எதற்காக வாழ வேண்டும்? யாருக்காக வாழ வேண்டும்?

'யாருக்காக?' என்ற கேள்விக்குப் பதில் என்று சொல்லும்படியாக, அவன் முன்பு பரிதாபகரமான ஐந்து முகங்கள் தோன்றின. எப்போதும் நோயாளியாக இருக்கும் அவன் தாயும், ஒருவரை விட ஒருவர் சிறுவர்களான நான்கு பேர் கூடப் பிறந்தவர்களும்!

போன வருஷம் வாமனன் அம்மாவைப் பார்ப்பதற்காக இரண்டு நாட்கள் ஊருக்குப் போய் தங்கியிருந்தான். அப்போது அவன் தங்கை தனக்கு ஒரு பூப்போட்ட பாவாடை வேண்டுமென்று அவனிடம் பிடிவாதம் பிடித்தாள்! வாமனன் ஐம்பது கடுதாசிக் கப்பல்கள் செய்து கொடுத்தும், அவன் தம்பி பாலு அழுது கொண்டேதான் இருந்தான். அந்தப் பையனுக்குத் தரையில் கிர்ரென்று ஓடும் ஒரு ரெயில் வண்டி வேண்டுமென்று ஆசை. 'அடுத்த வருஷம் வரும்போது நான் உனக்கு ரெயில் வண்டி வாங்கி வருவேனடா!' என்று வாமனன் அப்போது பாலுவுக்கு வாக்குறுதி தந்து ஆறுதல் சொல்லியிருந்தான்.

ஆனால்,—இந்த வருஷம் முழுதும் வாமனனுக்குத் தன் வயிற்றை அன்றாடம் நிரப்பிக்கொள்வதே பிரம்மப் பிரயத்தனமாகப் போய்விட்டது. மாதா மாதம் அம்மாவுக்கு ஐந்தாறு ரூபாய்களாவது செலவுக்கு அனுப்புவது ஒரு புறம் இருக்கட்டும். நடுவில் ஒரு தடவை அவளிடமிருந்தே அவன் பணம் வரவழைத்துக்கொள்ள நேர்ந்துவிட்டது. 'பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில், 'காக்கை கூடத் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளுகிறது—' என்ற நீதி வாக்கியத்தை உருப் போடும் போதெல்லாம், அவன் தன் வாழ்க்கையில் தானும் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்து முடிக்க வேண்டுமென்று எத்தனையோ தடவைகள் தீர்மானம் செய்திருந்தான். ஆனால், இன்று உலக அநுபவத்தில் கனிந்த அவன் மனம், 'அந்த நீதி வாக்கியத்திலுள்ள காகம் பெரிய பாக்கியசாலியாகத்தான் இருக்க வேண்டும். அதற்கு நாள் தவறாமல் வயிறு நிரம்பச் சாப்பாடாவது கிடைத்துக் கொண்டிருந்தது. உனக்கு அதுகூடக் கிடைத்தபாடில்லையே!' என்றது

மாலையில் கூடுகளை நோக்கிச் சென்ற காகங்களைக் கண்டு வாமனனுக்குப் பொறாமை உண்டாயிற்று. 'இந்தக் காகங்கள் எங்கிருந்தாவது தம் குஞ்சுகளுக்குத் தீனி கொண்டு வந்திருக்கும். ஆனால் நானோ? எனக்கு ஊரிலுள்ள என் வீட்டுக்குப் போவதற்கு— அம்மாவுக்கும் கூடப் பிறந்தவர்களுக்கும் முகங் காட்டுவதற்கு- வெட்கமாயிருக்கிறது! எனக்கும் கூடு இருக்கிறது. ஆனால்.—' அவன் சிந்தனைச் சங்கிலி, இந்த இடத்தில் அறுந்தது.

**ஆசிரியர் அனுமதியுடன்**
**கா. ஸ்ரீ. ஸ்ரீ.**
**மொழிபெயர்த்தது**

அவன் சட்டைப் பையில் இருந்த கடிதம் இடைமறித்து. 'உன் கூடு இனி உன்னுடையதன்று! அது—' என்று கூச்சலிட்டது.

வாமனன் தன் பையிலிருந்து தாயின் கடிதத்தை எடுத்து மீண்டும் படித்தான். மத்தியானம் கண்களில் நீர் சொரிய, அவன் அந்தக் கடிதத்தைப் பாராயணம் செய்திருந்தான். ஆனால் அந்தக் கண்ணீரினால் அதில் ஓர் அட்சரம் கூடக் கலங்கவில்லை. இருநூறு ரூபாய் பழைய கடன், அதன் வட்டி—இவைகளுக்காக, ஊரிலிருந்த வாமனனுடைய வீடு ஸாவ்காரின் வசம் போய்விடுவதாயிருந்தது. ஒரு துஷ்டன் கூட்டை அழித்து அதிலுள்ள சிறகு முளைக்காத குஞ்சுகளைத் தரையில் எறிந்துவிட்டால், தாய்ப் பறவைக்கு எவ்வளவு வேதனை உண்டாகுமோ, அவ்வளவு வேதனையைப்பற்றிய அறிவும், அவனுக்குத் தன் தாயின் கடிதத்திலிருந்த ஒவ்வொரு சொல்லைப் படித்ததும் உண்டாயிற்று.

ஆனால், அந்தக் கடிதத்துக்கு அவன் என்ன பதில் எழுதுவது? இருநூறு தம்படிகளுக்கு வழியில்லாதவன் இருநூறு ரூபாய்கள் எங்கிருந்து கொண்டு வருவான்? 'அரிச்சந்திரனின் காலத்தில் அடிமை என்றாவது மனிதனுக்கு ஏதோ கொஞ்சம் மதிப்பு இருந்தது. ஆனால் இன்றைய இந்தக் காலத்தில் அதுவும் இல்லையே!' என்று அவன் மனம் தவிதவித்தது

அருகிலிருந்த ஆலையின் சங்கு ஊதியது. 'தொழிற்சாலையிலிருந்து விட்டதும், சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்கு அடுத்த பாதையில், தொழிலாளிகள் கும்பல் கும்பலாகப் போனார்கள். ஆண்கள், பெண்கள், மகம்மதியர்கள், ஹிந்துக்கள்;—எல்லா ஜாதிகளும், எல்லா வகுப்புகளும் அந்தக் கூட்டத்தில் அவனுக்குத் தென்பட்டன.

வாமனன் குதூகலத்தோடு அந்தப் புதிய உலகத்தைப் பார்க்கலானான். பெண்களின் அந்தக் கிழிந்து போன பழம் புடவைகளும், ஆண்களின் தாடி வளர்ந்த முகங்களும், பலர் கைகளில் இருந்த அந்தக் கன்னங் கரிய சோற்றுப் பாத்திரங்களும் பெரும்பாலும் எல்லோர்



கால்களிலும் இருந்த அந்தத் தடிமனான நாட்டுச் செருப்புக்களும்;- இது ஏதோ ஒரு விசித்திரமான உலகம் என்றே அவன் கருதினான்.

சற்று நேரத்துக்குள்ளேயே இரவு முறைக்காரர்களான தொழிலாளிகளின் கூட்டங்கள் ஆலையை நோக்கி வரலாயின. சற்று நேரத்துக்கு முன்பு ஆலையை விட்டு வெளியே வந்த பனிதர்களைப் போலவேதான் இந்த மனிதர்களும் இருந்தார்கள்! அவர்களின் சிரிப்பும் கோம்மாளமும் வாமனனுக்கு என்னவோ போலத் தோன்றின. அவன் தான் இருந்த இடத்திலிருந்து நகர்ந்து மெதுவாக நடக்கலானான். ஆனால், ஒரு பர்லாங் தூரம் போயிருப்பானோ இல்லையோ, அங்கே ஓரிடத்தில் பெருங் கூட்டம் குழுமியிருப்பதை அவன் கண்டான். என்ன விசேஷம் என்று பார்ப்பதற்காகக் கூட்டத்தைக் கடந்து, முன்னால் சென்றான். ஒரு கிணற்றங்கரையில், அப்போதுதான் வெளியே இழுத்துப் போடப்பட்ட ஒரு தருணியின் பிணம் கிடந்தது. அவள் தானாக உயிரை விட்டாள் என்பது வெளிப்படையாகத் தெரிந்திருந்தது. ஜனங்கள் கொச கொசவென்று பேசிக் கொண்டிருந்ததை வாமனன் காது கொடுத்துக் கேட்டான். மாமியாரின் உபத்திரவம் பொறுக்காமல் அந்த இளம் பெண் தற்கொலை செய்து கொண்டாள் என்று தெரிந்தது.

வாமனன் அந்தப் பிரேதத்தை உற்றுப் பார்த்தான். காலால் பாம்பை மிதித்து விட்டாற் போல, அவனுடல் ஒரேடியாகக் குலுங்கியது. அவனுக்குத் தன் எதிரே அந்த இளநங்கையின் பிணம் தென்படவில்லை; தானே உயிரற்ற நிலையில், அங்கே விழுந்து கிடப்பது போன்ற தோற்றம் அவனுக்கு உண்டாயிற்று.

* * * *

பயங்கரமான அந்தத் தோற்றத்தை மறக்கவேண்டுமென்று வாமனன் ஜிவ்வென்று நடந்தான். வெகு தூரம் சென்றதும் அவன் பின்னால் திரும்பிப் பார்த்தான். அந்தக் கிணறு—அதைச்சுற்றிக் குழுமியிருந்த கும்பல்—எதுவுமே இப்போது அவன் கண்களுக்குத் தென்படவில்லை. க்ஷணப்பொழுது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. ஆனால் மறுநிமிஷமே அவனுக்கு அந்த துரதிருஷ்டப் பெண்ணின் முகம் தென்பட்டது. ஒரு நொடியில அந்த முகம் மறைந்து அது இருந்த இடத்தில் தன் முகம் இருப்பதை அவன் தெளியக் கண்டான்; கலவரமடைந்தான்.

அவன் மனம், 'அந்த இளம் பெண்ணை அவள் மாமியார் துன்புறுத்தி வந்தாள், உன்னைச் சுற்றுப்புறத்து நிலைமை துன்புறுத்துகிறது. அவள் தற்கொலை செய்துகொண்டு சுகியாகிவிட்டாள்; நீ மட்டும்—' என்றது.

இதை நினைத்தவுடனே வாமனனின் மனநிலை, மோட்டார்கார் இறக்கத்தில் இருக்கும்போது, திடீரென்று அதன் பிரேக் கெட்டுப்போய்விட்டால் எப்படியோ, அப்படி இருந்தது. தான் அநுபவித்துக் கொண்டிருந்த கஷ்டத்தினின்றும் தொந்தரவினின்றும் விடுபடுவதற்குத் தற்கொலை தவிர வேறு வழியில்லை என்பது அவனுக்கு நிச்சயமாகிவிட்டது. அடைமழைக்காலத்தில் ஆகாயம் ஒரே நொடியில் மேகங்களால் சூழப்படுவது போல, தற்கொலையைப் பற்றிய எண்ணங்களால் அவன் மனம் நிரம்பிவிட்டது. அவன் கால்கள் திடீரென ரயில் தண்டவாளம் இருந்த திசையை நோக்கி நடந்தன.

* * * *

தண்டவாளத்தின் மேல் உட்கார்ந்து அவன் யோசனை செய்யலானான். காரிருளில் மலர்ந்த நிலவொளியும், ஊரில் தொலையிலிருந்து மினுமினுத்த மின்சார விளக்குகளும், அவன் உடலில் குதுகுதுப்பை உண்டாக்கிச் சென்ற காற்றலைகளும் இந்தச்சராசர உலகம் முழுதும்—'வாழ்வதில்தான் ஆனந்தம் இருக்கிறது' என்று அவனிடம் கூறின. ஆனால் அவன் மனமோ 'என்ன காரணத்துக்காக வாழ்வது? ஒவ்வொரு நாளும் எழுந்தவுடனே வயிற்றுக் கவலையைப் பட்டுக்கொண்டு உட்காருவதற்கா? கசாப்பு கடையில் வைக்கப்படும் ஆடுகளுக்குக் கடைசியான ஒரு நாள்தான் துன்பம். ஆனால் ஒவ்வொரு நாளும் நாள் முழுதும் துன்பத்தோடேயே பொழுது கழிக்க வேண்டியிருப்பவனுக்கு வாழ வீண் முயற்சி செய்வதால் என்ன பிரயோஜனம்?' என்றது.

தண்டவாளங்கள் மெல்ல மெல்ல நடுங்கலாயின, வண்டி அருகில் வந்து கொண்டிருந்தது. வாமனன் மனத்தை உறுதிப் படுத்திக்கொண்டு தண்டவாளங்களுக்குக் குறுக்கே படுத்துக் கொண்டான்.

அரைக்கணத்தில யாரோ தன்னைப் பின்னால் இழுப்பது போன்ற தோற்றம் அவனுக்கு உண்டாயிற்று. அவன் தலையைத் தூக்கிப் பின்னால் திரும்பிப் பார்த்தான். சற்று நேரம் முன்பு கிணற்றில் விழுந்து பிராணனை விட்ட அதே மங்கை அவன் பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

அவன் உடல் முழுதும் ஒரே வேர்வைமயமாக இருந்தது, சட்டென எழுந்து தொலையில் ஓடிவிடத் தோன்றியது. ஆனால், அவள் உடனே தன் தற்கொலை நிச்சயத்தை உறுதிப் படுத்தினாள், தன் மனத்துக்குள். 'என் தாய் பிறர் வீட்டில் கூலி வேலை செய்வதை இந்தக் கண்களால் பார்ப்பதைக் காட்டிலும் நிரந்தரமாகக் கண்களை மூடிக் கொள்வதில் என்ன கெடுதி? என் தம்பி தங்கைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க என்னால் முடியாது; அவர்களுக்கு நல்ல துணிமணிகள் வாங்கித் தர முடியாது; அவர்களுக்குக் கனவில்கூட வயிறு நிறையச் சாப்பாடு போட முடியாது! இவை யெல்லாவற்றையும் பார்ப்பதைவிட ஒரே க்ஷணத்தில் இந்த உலகத்தினிடமிருந்து விடை பெற்றுக்கொள்வதில் என்ன கெடுதி?' என்று சொல்லிக் கொண்டான்.

ஸ்திர மனத்தோடு அவன் தண்டவாளங்களின் நடுவில் விழுந்து கிடந்தான். தன் அமைதித் தன்மையைக் கண்டு அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. சாவுக்குப் பின்பு தனக்குத் தென்படப்போகும் புதிய உலகம் எப்படியிருக்குமோ என்ற கற்பனை யலைகளில் அவன் ஒரு கணம் மிதந்து கொண்டிருந்தான்.

ஆயினும் மறுகணமே அவனுடல் குலுங்கியது, கைகாட்டி மரம் சாயாததனாலோ அல்லது ஸ்டேஷன் சமீபத்திருந்ததனாலோ எஞ்சின் கர்ணகடோரமாக ஊதியது. அந்த ஒலியைக் கேட்டு அவன் உள்ளம் தடதடவென்று அடித்துக் கொண்டு பதறியது, அவன் திடீரென்று தண்டவாளங்களை விட்டு விலகி, ஒரு புறமாக நின்றான்.

கடகடா-தடதடா என்ற சத்தத்தோடு வண்டி அவனைக் கடந்து சென்றது. மூன்றாம் வகுப்பு வண்டிகளிலெல்லாம் என்றுமில்லாத, சொல்லிலடங்காத கூட்டம், எத்தனையோ பேர் சாமான்கள் மீது உட்கார்ந்திருந்தார்கள்; ஒரு ஸ்திரீ தன் பச்சிளங் குழந்தையை வயிற்றோடு ஒட்டி அணைத்துக் கொண்டு, கதவருகே உடலைக் குறுகிக் கொண்டு நின்றதை அவன் கண்டான்.

மூன்றாம் வகுப்புப் பெட்டிகளுக்குப் பின்னால் இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் ஓடின. அவைகளிலொன்றில் பிரமாண்டமான ஒரு பெருத்த ஆசாமி ஸிகரெட் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்,

வண்டி போய்விட்ட பின்பும் வாமனன் அப்படியே நின்று கொண்டிருந்தான். அடிக்கடி அவனுக்கு, ஜன்னலருகே நின்றிருந்த அந்த ஸ்திரீயின் ஞாபகம்வந்தது. 'ஓயாமல் நின்றிருந்து அவள் உடல் எவ்வளவு வலித்துக்கொண்டிருக்கும்? ஆனால், அவள் அந்தக் கஷ்டங்கள் எல்லாவற்றையும் ஆனந்தமாகப் பொறுத்துக்கொண்டிருந்தாளல்லவா? ஆகவே நான் மட்டும்—' என்று அவன் சிந்தனை ஓடியது.

வாமனனின் கால்கள் ஊர்ப்புறமாகத் திரும்பின. சிறிது தூரம் சென்றதும், கிராமத்துக்கு வெளியே ஒரு பங்களாவில் பெரிய தடபுடலாக இருப்பதை அவன் பார்த்தான், அங்கே ஏதோ ஒரு விருந்து நடந்து கொண்டிருந்தது. சாலையிலிருந்து தெரிந்த ஜன்னல் வழியே அவன் பார்த்தான். துரை வேஷம் தரித்த ஆண்களும், சினிமா நடிகைளைப் போல அலங்கரித்துக்கொண்டிருந்த பெண்களும்;—அவன் வேறுபுறமாகப் பார்த்தான். கரண்டி ஸ்பூன்களின் கணகணவொலிக்கு இடையே ரேடியோப் பாட்டு ஆரம்பமாயிற்று: 'என் வீட்டு வாசலில் ரோஜா மலர்ந்ததடீ!'

அவன் வெறுப்புற்று எதிரே பார்த்தான். ஆலையின் புகைக் கூண்டிலிருந்து வெளியே வந்த புகைப் படலம், இராவேலை செய்யும் தொழிலாளிகள் தம் வேலைகளை எவ்வளவு நாணயத்தோடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்தியது. வெறுமே ஆனந்த நடனம் புரியும் மனிதர்கள் நிறைந்த இந்தப் பங்களாவின் அருகில் ஒரு க்ஷணங்கூட நிற்கக்கூடாதென்று அவனுக்குத் தோன்றிற்று.

அவன் பரபரவென்று நடந்தான், 'என் வீட்டு வாசலில் ரோஜா மலர்ந்ததடீ!' என்ற பாட்டின் இசை லேசாக அவன் காதில் விழுந்து கொண்டு தான் இருந்தது. 'தம் வீட்டு வாசலில் ரோஜாவை மலர வைக்கும் இவர்களுக்கு அந்தப் பூக்களின் செந்நிறம் யாருடைய ரத்தத்தால் ஆகியது என்பதைப்பற்றி ஒன்றுமே தெரியாது!' என்றது அவன் மனம்.

ஆலைக்கு அருகிலிருந்த தொழிலாளிகளின் குப்பத்தில் அவன் நுழைந்து சென்றான், எல்லாம் சிறு மண் குடிசைகள்! அவற்றிற்கு வாசல் ஏது? ஆகவே வாசலில் ரோஜா பூப்பதைப் பற்றிப் பேச்சேயில்லை!

ஒரு வீட்டின் முன்பு ஏழெட்டு மனிதர்கள் உள்ளே புழுக்கம் தாங்காமல், வெளியிலேயே தூங்கிக் கொண்டிருந்தார்கள் அவர்களுடைய அந்தக் கந்தைக் கூளங்களான உடைகளைக்

(14-ம் பக்கம் பார்க்க)

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது

501 ஸ்பெஷல் ஸோப்பு வீட்டுச் சலவைகளை லகுவாக்கின்றமையால் எல்லா மனையாட்டிகளுக்கும் அது இன்றியமையாததாகும். அது வெள்ளை வஸ்திரங்களை வெண்மையாகவே யிருக்கச்செய்வதுமன்றி, சாயம் தோய்த்த ஆடைகளையும், மெல்லிசான துகளையும் பிரத்தியேகமாகச் சுத்தமாக வெளுக்கிறது.

டாம்கோ விற்பனை இலாகா,
1, வாரன்ரோட்,
பீமன்பெட்,
மைலாப்பூர்,
மதராஸ்.




தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.
FS. 1950.

# கலையின் பலி

**சிறு கதை**

★

**ஜே. பார்த்தசாரதி எழுதியது**

நகர் எங்கும் ஒரே பரபரப்பு. அன்று அரசனுணையால், உலக நாயகனுகிய விஷ்ணுவுக்கு நிர்மாணிக்கப்பெற்ற ஆலயத்திலே விக்கிரகப்பிரதிஷ்டை நடக்கப் போகிறது என்ற பேச்சுதான் ஊர் முழுதும்! ஆடவர், மாதர், சிறுவர், சிறுமியர் யாவரும், தேவகானத்தால் எழுந்த மாளிகையெனச் சொல்லத் தகுந்த கோயிலுக்கு விரைந்து செல்கின்றனர். வானளாவி, ஓர் உன்னத மனோரதம் கை கூடியது. பொற் காட்சியளிக்கும் கோயிலுள், எம்பெருமான் திருமுன் மன்னன் மெய் சிலிர்த்துக் கை கூப்பி நிற்கிருன். மந்திரிச் சுற்றமும் மாந்தர் வெள்ளமும் அவனைச் சூழுகின்றன. மனிதனின் கற்பனு சக்தியிலே வளர்ந்த அழகெல்லாம் ஒரு சேரப் பெற்றுள்ள திவ்ய மங்கள மூர்த்தியைக் கண்ணுரக் கண்டு, ஜனக் கூட்டத்திலே, "கேசவ மாதவ கோவிந்த முராரே" என்ற பேராரவாரம் எழுகிறது. பிரதிஷ்டை செய்யும் புரோகிதர்கள் வேத கோஷம் செய்கின்றனர். மங்கள வாத்தியங்கள் முழங்குகின்றன, நம்பி நாரணனை மஞ்சன மாட்டுகின்றனர்.

ஹோய்ஸால மன்னன் ராஜதானியாகிய துவார சமுத்திரத்திற்கருகிலே உள்ள பேலூரில் சுமார் 1200 வருஷங்களுக்கு முன் இக்கோலாகலம் நடைபெற்றது. விஷ்ணுவர்த்தன சக்கரவர்த்தி, பரமாசாரியரான ராமாநுஜரின் உபதேசத்தால், ஜைன சமயத்தைத் துறந்து, வைஷ்ணவத்தை மேற்கொண்டான். இஷ்ட தெய்வமாகிய சென்னகேசவருக்குத் தலை நகருக்கருகில், நானிலத்தோர் கொண்டாடும்படி பேரெழில் வாய்ந்த ஓர் ஆலயம் சமைத்தான். கற்தச்சர்களில் தலைசிறந்த ஜகணுசாரி அரசன் உத்தரவின் மேல், கலைக்கே செலவிட்ட தன் வாழ்க்கையனுபவங்களை யெல்லாம் ஒருங்கே திரட்டி, சௌந்தரிய மயமான சிலையொன்றை சிருஷ்டித்திருந்தான். இம்மூர்த்தியின் சன்னிதானத்திலே, குழுமியிருந்த மக்கள் தங்கள் கனவு நனவானது கண்டு ஆர்ப்பரித்தனர்; "சௌந்தரிய மூர்த்தியைத் தரிசிக்கச் சேர வாரும செகத்தீரே!" என்று அழைத்தனர்.

ஆம், அஞ்ஜனத்திரளிலே தான் ஓர் இளஞ் சிறுவன் சென்னகேசவரின் அழகிலே ஈடுபட்டு முழுதும் மெய் மறந்து விடவில்லை; அப்பெருமான் திருமேனியை ஒரு தேர்ந்த சிற்பியின் கண்களுடன்பார்த்தான். அவன் முகமலர்ச்சி, 'மிகவும் அற்புதமாகச் செய்யப்பட்டதுதான் சென்னகேசவரின் சிலை' என்று அருகிலுள்ளோர்க்குத் தெரிவித்தது. ஆனல், மறு கணத்தில், ஏதோ குற்றத்தை அவன் கண்டு பிடித்ததுபோற் காட்டியது அவன் முகச் சுளிப்பு. அவன் ஆராயும் கண்களுக்கு, பிரதிமையின் திருமார்பின் அழகைக் கெடுக்கும் சிறு குழியொன்று புலப்பட்டுவிட்டது. ஹோய்ஸால ராஜ்யத்திலேயே ஒப்பற்ற சிற்பி அமைத்த மாசற்ற மேனிக்கு ஒரு மருவைக் கற்பித்த சிறுவன் செய்தி காட்டுத் தீ எனத் தலை நகரெங்கும் பரவியது. சிற்பச் சக்கரவர்த்தி, கலையின் முடிசூடா மன்னனெனப் பெயர் பெற்ற ஜகணுசாரியின் வேலைப் பாட்டைக் குறை கூறத் துணிந்த சிறுவனைக் காண மாந்தர் மொய்த்தனர். அந்நகரச் சிற்பிகளுக்குள்ளே, பையனின் முக வசிகரத்தையும் கலைஞானத்தையும் வியந்தோர் ஒரு சாரார்; அவன் துணிச்சலையும் அசட்டு தைரியத்தையும் கடிந்தோர் மற்றொரு சாரார்.

துவார சமுத்திரத்தின் நடு நாயகமாக விளங்கிய மன்னன் அரண்மனைக்கும் இவ்வற்புதச் சிறுவன் விவரம் எட்டாமலில்லை. ஏவலாளிகள் ஓடோடியும சென்று சிற்பி குமரனை அரச சமூகத்தில் கொணர்ந்து நிறுத்தினர். ஜகணுசாரியும் அரசவையில் அமர்ந்திருந்தான்.

"அரசே, சென்னகேசவப் பெருமான் திவ்யமங்கள ரூபத்தைக் குறை சொல்வது என் நோக்கமல்ல; சிற்பக் கலை முன்னேற்றத்திற்காக நான் கண்ட உண்மைகளை எடுத்துக் கூறத் தயங்கேன், அந்த அற்புத சிருஷ்டியிலும ஒரு மாசு என் கண்களுக்குப் புலனுயது என் நன்மைக்கோ தீமைக்கோ அறியேன்" என்று மொழிந்தான், இளங்களை.

ஜகணுசாரிக்கு ஆச்சரியமும் ஆத்திரமும் பொங்கின; எனினும் "நீ கண்ட குற்றங் குறைகளைத் தெளிவாகக் கூறுவாயாக கலையபிவிருத்தில் ஊக்கமுடையோர்க்கு உயர்வு தாழ்வு ஏது?" என்று தைரியங் கூறினன்.

"சிற்பக் கலையின் ஒரு சிகரம் தான் சென்னகேசவரின் கற்சிலை ஆனல் ஓரே ஒரு மாசு, திரு மார்பிலே, சரிசமனுக இல்லாது, ஒரு குழி விழுந்தது. ரூப சௌந்தரியத்தை கெடுக்கிறது" என்று தான் தேர்ந்த உண்மையை சற்றும் அச்சமின்றி வெளியிட்டான் சிறுவன்.

"என் கண்களுக்குப் புலப்படாத திட்ட நுட்பம் சிற்பத்தில் கற்றுக் குட்டியாகிய உன் கண்களுக்கா தென் பட்டது? எவ்வளவு ஆணவம் உனக்கு, பையா!" என்று கலைச்சிங்கமாகிய ஜகணுசாரி கர்ஜித்தான்.

விஷ்ணுவர்த்தன மன்னன் கலைவளர்ச்சியில் பேரார்வம் பூண்டவன் அவன் மனதில் சிறுவன் சொல்வதிலும உண்மை இருக்கக் கூடும் என்ற கடுகளவு சந்தேகம் தோன்றியது. அத்தாணி மண்டபத்தில் கூடியிருந்த சபையோர்களும் பக்ஷபாதமின்றி விஷயத்தைச் சர்ச்சை செய்யவேண்டும் என்ற எண்ணங்கொண்டனர். ஆலயத்தில் சென்னகேசவப் பெருமானுக்கு சந்தனக்காப்பும் விசேஷ கற்பூரார்த்தியும் ஏற்பாடு செய்ய உத்தரவிட்டான். அரசன் பரிவாரங்கள் புடைசூழ, ஜகணுசாரியும் சிற்பி குமரனும் பின்தொடர விஷ்ணுவர்த்தனன் சந்தனக்காப்பிட்ட திருகோலத்தைத் தரிசிக்கக் கோயிலுக்குச் சென்ருன்.

கற்பூரஹாரத்தியிலே,சிறுவன் கூறிய குற்றம் பளிச்சென்று தோன்றிவிட்டது. பெருமானின் திருமார்பிலே துளசிமாலைக்குக் கீழே, தொப்பூழ் அருகிலே, சந்தனக்காப்பு சமனுகவில்லை; குழிவாகத்தான் இருந்தது: பிரதிமையின் கம்பீரத் தோற்றத்துக்கு அது ஒரு மாசல்லவா? கடல் போன்ற மார்பிலே, தொப்பூழுக்கு மேல் ஒரு குழிவு—அதுவும் ஒரு தவளை மறைந்து வாசம் செய்யக்கூடியது— இருப்பது குற்றமல்லவா? ஜகணுசாரியும் இவ்வுண்மை தெளிந்தான்; எதிர் நின்ற சிறுவனை ஏற இறங்கப் பார்த்தான். ஆனல் அவ்விளங்காளையின் முகத்திலோ வெற்றிக் குறியொன்றும் காணவில்லை. கலைஞானத்தால் தன்னை இளங்கலையரசனென நிரூபித்த சிறுவனை மெச்ச ஒரு பெருத்த கரகோஷம் எழுந்தது.

ஆனல் சட்டென்று அக்கர கோஷம் நின்றுஜனக்கூட்டம் திகைக்கும்படி ஓர் சம்பவம் உடனே நிகழ்ந்தது. தன்கலை வன்மைக்குப் பழி நேரிடும்படி செய்த வலது கையை எம்பெருமான் முன்னிலையிலேயே, ஜகணுசாரி வாள் கொண்டு அரிந்து எறிந்தான். ஒரு மாசு—அது எவ்வளவு சிறியதாயிருந்தால் என்ன—கலைக்கு பங்கம் தானே? அது கடவுளுக்கு ஏற்குமா? தன் வாழ்க்கை, உயரிய லட்சியங்களுக்கே செலவிட்ட வாழ் நாள், வீணுய்விட்டதே என்ற ஏக்கம் குடிகொண்டது சிற்பக் கலைஞனுக்கு.

கலைக்கெனப் பிறந்த இவ்விள மேதாவி யார், என்ற வினு ஜகணுசாரியைத் துன்புறுத்தியது. ஊரில் சென்று விசாரித்தான்; தன்னை வென்ற பையன் கிருதபுரம் என்ற நகரத்தில் ஒரு சிற்பிக்குப் பிறந்தவன் என்றும், தகப்பனுர், வீட்டை விட்டு வெகு கால முன்னமேயே வெளியேறியதனுல், சிற்பத்தொழிலைக் கற்று ஊர் ஊராகச் சென்று ஊதியம் தேடுபவன் என்றும் கேள்விப்பட்டான். வெகு தூரத்தில் விடப்பட்ட கடலரவம் மந்தமாகக் காதுகளில் ஒலிப்பது போல், சென்று போன நாட்களின் நினைவுகள் ஜகணுசாரியின் மனக்கண் முன் தோன்றின. கிருத புரத்தை வாலிபனாக விட்டு வந்த சிற்பி அவனே; பிழைப்பின் பொருட்டு ஹொய்சல மன்னன் தலை நகருக்கு வந்து அவன் மயிர் நரைத்துவிட்டது. புறப்படும் பொழுது அவன் மனைவி பூரண கர்ப்பவதியாயிருந்தாள்; ஒரு வேளை தனக்குப் பிறந்த குழந்தை தானே இம்மாதிரி வளர்ந்து விட்டான்? எதற்கும் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக சிறுவன் வீடு நோக்கி நடந்தான்.

சிறு குடிசையிலே, மினு மினுவென்று மங்கிய ஒளி விடும் விளக்கு வெளிச்சத்திலே, கிழ உருவம் ஒன்று பேசுவது அவன் காதுகளில் விழுந்தது. "ஏண்டாப்பா, நீ ராஜா கிட்ட கூட போயி பேரைக் கெடுத்துக்கிறயாமே? நமக்கென்னத்துக்கு பெரியத்தனமெல்லாம்?"--கிழவியின் குரலிலே, தான் யௌவனத்திலே மணந்த மனைவியின் குரலைக்கேட்டான். பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமோ? ஜகணுசாரியின் கலைக்கு ஏற்பட்ட பங்கத்துடன், குடும்ப வாழ்வின் புது மலர்ச்சியும் நேர்ந்தது.

ஹொய்ஸாலாதிபன் தன் பிரதம சிற்பியைத்தேற்றினுன்; சிற்பக்கலையில் மகன் தந்தையின் மேலும் வெற்றிபெறுவது உலக வியல்புக்கு ஒத்ததுதானே? சிஷ்யன் குருவுக்கு மேல் கற்பது போல், சிற்பியின் பிள்ளை பெருஞ் சிற்பியாவதில் ஆச்சரியம் என்ன? சென்னகேசவப் பெருமானும் திருவருள் கூர்ந்தார்; ஜகணுசாரியின் கனவிலே தோன்றி, அவனைக் கிருதபுரத்துக்குச் சென்று அங்கு தனக்கு ஓர் ஆலயம் கட்டுவிக்க உத்தரவிட்டார்; அவன் வலது கையைத் திரும்ப அளிப்பதாகவும் கூறியருளினுர். மனத்தில் வாழும் பரம்பொருளின் ஆணையைச் சிரமேற்கொண்டு, சிற்பத்தலைவன், தன் சொந்த ஊரில் ஒரு சிறந்த ஆலயத்தைச் சென்னகேசவருக்கு எடுப்பித்தான்; அதன் பயனுக இழந்த தன் கையையும் பெற்ருன். இந்நிகழ்ச்சியின் அறிகுறியாகக் கிருதபுரத்திற்குக் கைதாளம் என்ற பெயர் வழங்குவதாயிற்று. மைசூர்ச்சீமையிலே இப்பெயர் கொண்ட ஊர் இன்னும் உள்ளது; இவ்வூரிலே பாழடைந்த போதிலும், காண்போர் வியக்கும் வேலைப்பாடமைந்த ஓர் விஷ்ணுவாலயம் ஜகணுசாரியின் பக்திச் சின்னமாக விளங்குகிறது.

**மதனமஞ்சரி**
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாது கேஷிகள் முதலிய வற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/-.

**மதன மஞ்சரி பார்மஸி,**
184, சைனுபஜார் ரோடு, மதராஸ்.

புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்.



# த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

**நௌகா சரித்திரம்**
**17-வது கீர்த்தனம்**

### I

பல்லவி

வேத வாக்ய மனி யெஞ்சிரி யீ
வெலது லெல்ல ஸம்மதிஞ்சிரி

**சரணம்**

1. சீரலன்னியு வதலிஞ்சிரி யெந்தோ
   வீக்குசேத னந்து னுஞ்சிரி
2. அந்துன நிலுவக போயெனு மேனு
   லந்தரிகி தடவனுயெனு
3. கனு கொந்துரோ யனி ஸரகுன பாலிண்டல
   கரமுல மூஸிதே மருகுன
4. மானமுலனு மூஸ கொந்துரோ தம
   ப்ரான முலனு காசு கொந்துரோ
5. செலுல நோரெண்டக னுயெனு நீரு
   சிலு சிலு மனி யெக்குவாயெனு
6. வல்வலு கானகபோயெனு ஸதுல
   வதனமு லடு ஸ்ருக்க நாயெனு
7. கரகி கரகி யங்க லார்ச்சிரி செலுலு
   கமலாக்ஷு னுரமுன ஜேர்சிரி
8. கனுல காடுக நீரு காரகா ஜூசி
   காந்து டெந்தோ முத்து காரகா
9. ரமுனுல மதமெல்ல ஜரிகெனு த்யாக
   ராஜனுதுனி மதி சரி கெனு

### II

வேதவாக்யமு அனி—கண்ணன் சொன்னதையே வேதவாக்யமாக
யெஞ்சிரி—கைக்கொண்டார்கள்
வெலது லெல்ல—கோபிகைகளெல்லோரும்
ஸம்மதிஞ்சிரி—கண்ணன் சொன்னது போல் செய்ய சம்மதித்தார்கள்.
சீரலு அன்னியு—தங்கள் ஆடைகளை
வதலிஞ்சிரி—விடுத்தனர்
எந்தோ வீக்கு சேதனு—மிகுந்த வெட்கமடைந்தவர்களாய் இருந்து
அந்துன் உஞ்சிரி—ஆடைகளை ஓடத்தின் த்வாரத்தில் அடைந்தார்கள்
அந்துன நிலுவக போயெனு—ஆடைகள் அங்கே அடைபட்டு நிற்காமல் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போயின.
அந்தரிகிமேனு தடவனுயெனு—அனைவருக்கும் சரீரம் வெட்கத்தினுல் நடுங்க ஆரம்பித்தது.
கனு கொந்துரோ யெனி—யாராவது பார்த்துவிடுவார்களோ என்று பயந்து
ஸரகுண—சீக்கிரமாக
பாலிண்டல கரமுல மூஸி—ஸ்தனங்களைக் கைகளால் மூடிக் கொண்டு
மானமுலனு மூஸ கொந்துரோ—மானத்தைக் காப்பாற்றிக் கொள்வார்களா?
தமப்பிரானை மூலனு காசு கொந்துரோ—தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்வார்களா?
செலுல—கோபிகைகளின்
நோரு எண்டகனுயெனு-வாய்கள் பயத்தினுல் உலர்ந்து போய் விட்டது.
நீரு சிலு சிலு மனி—தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக
யெக்கு வாயெனு—ஓடத்திற்குள் புகுந்து அதை முழுக்க ஆரம்பித்தது.
ஸதுல வல்வலு கானக போயெனு—அப்பெண்மணிகளின் ஆடைகளும் காணுமல் போய்விட்டன.
வதனமுலு அடு ஸ்ருக்க நாயெனு—அதனுல் அவர்களுடைய முகங்கள் அவ்விதம் சுண்டிப் போய்விட்டது.
செலுலு—ஸ்திரீகள்
கரகி கரகி யங்கலார்சிரி—உருகி உருகி அழுதார்கள்.
கமலாக்ஷுன் உரமுன ஜேர்சிரி—தாமரைக் கண்ணனை க்ருஷ்ணன்பால் அன்புகொண்டு அவனை மார்புறத் தழுவிக் கொண்டார்கள்
கனுலல் காடுக—கண்களினின்றும் மை கலந்த
நீரு காரகா—கண்ணீர் ஆருகப் பெருக
ஜூசி—அதைப் பார்த்து
காந்துடு—ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா
எந்தோ முத்து காரகா—எவ்வளவோ அவர்களிடம் கருணை கொண்டார்.
ரமனுல மதமெல்ல ஜரிகெனு—இந்த ஸ்திரீகளின் கர்வமெல்லாம் அடங்கிவிட்டது என்று
த்யாகராஜனுதுனிமதி கரிகெனு—த்யாகராஜனுல் துதிக்கப்பட்ட ஸ்ரீ க்ருஷ்ணனின் மனது இளகிவிட்டது.

### III

கண்ணன் வேணுகானத்தைக் கேட்டுப் பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனு தீரம் சென்று ஓர் ஓடத்தில் ஏறி உல்லாஸமாகப் பொழுது போக்கினர். தாங்கள் அடைந்த இன்பத்தினுல் தங்களுக்கு சமானம் ஒருவருமில்லை என்று கர்வமடைந்து கண்ணனையும் பரிகாசம் செய்யலானுர்கள். இவர்கள் கர்வத்தை அடக்க பகவான் இந்திராதி தேவர்கள் உதவியால் காற்று மழையை வருவித்து, ஓடத்திலும் ஒரு த்வாரம் உண்டாகும்படி செய்தார். இதைக் கண்ட கோபியர்கள் மனம் வருந்தி தங்கள் செயலுக்காக தங்களை நொந்து கொண்டு சர்வ சக்தனுன கண்ணனை சரணடைந்து, அவ்வாபத்தினின்றும் எல்லோரையும் தப்புவிக்க ஏதாவது உபாயம் சொல்லுமாறு பிரார்த்தித்து வேண்டிக் கொண்டனர். அதற்கு கண்ணன் ஓடத்தில் தண்ணீர் புகா வண்ணம் செய்ய அவர்கள் ஆடைகளை அந்த ஓடத்தின் த்வாரத்தில் அடைக்குமாறு உபாயம் கூறினுர். இது கேட்டு வெட்கங் கொண்ட கோபியர்களுக்கு தகுந்த சமாதானம் கூறினுர்.

வேத வாக்யமனி:—இது நௌகா சரித்திரம் 17-வது கீர்த்தனம். கண்ணன் வார்த்தையை வேத வாக்கியமாக எண்ணி கண்ணன் சொன்னது போலவே செய்ய, அவ் வாடைகளும் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டன. தங்கள் செய்கையில் யாதொரு பயனுமில்லாததால் கோபியர்கள் கர்வத்தை ஒழித்து தங்கள் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கண்ணனை மனமுருகி ப்ரார்த்திக்க கண்ணன் மனம் இளகிற்று என்கிற வரலாறு இக் கீர்த்தனத்தில் கூறப்பட்டுள்ளது.

### IV

ராகம் மோகனம் — மிசிர சாபு தாளம்

(29—வது மேள ஜன்யம் ஆ. ஸரிகபதஸ் அவ. ஸ்தபகரிஸ)

பல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; கா ; | கா ; கா ; | கா கா ; | கா ; கா ரீ |
| வே | த வாக் | ; ய | ம னி . |
| கா ரீ ; | கா ; பா ; | ; ; ; | கா பா தா ஸ்ா |
| எஞ் . | சி ரி | | ஈ . . . |
| ; தாரீ | ஸ்ா ; ஸ்ா தா | ஸ்ா தா பா | பா கா பா ; |
| வெ ல | து . லெல் . | . ல . | ஸம் . . |
| பா தாஸ்ா | தா ; பா ; | கா தா பா | காரீ ஸா ரீ |
| ம . | திஞ் . | சி . . | ரி . . |
| கா | | | |

(வேதவாக்யமு)

(சரணங்களை பல்லவி போன்றே பாடவும்.)



காரியக்கமிட்டி மெம்பர்கள்

காரியக்கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஸ்ரீ பட்டாபி சீதாராமய்யா, ஸ்ரீ சங்கரராவ் தேவ், டாக்டர் ஸையத் மாமூத்.

நிலைக் கொள்ளியில் அகப்பட்டுள்ள இந்த நேரத்தில் காங்கிரஸ் தற்போது உத்தேசித்துள்ள வழியே தப்புவதற்கான சிறந்த அநுபவத்துடன் கூடிய வழியென அவர் விளக்கிக் காட்டினார். அதன் பின் மகாத்மா பேசினார். அவர் காங்கிரஸ் கோரிக்கைகளைப் பிரிட்டனும் நேச தேசத்தினரும் அங்கீகரித்தால் அவர்களுக்குத் தான் லாபம் என எடுத்துச் சொல்லி, தீர்மானத்தைப் பற்றிய தமது முழுக்கருத்தைப் பிறகு வெளியிடுவதாகச் சொல்லிவிட்டார். "இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் அதிகாரம் மறைய வேண்டும்" என்ற கோரிக்கையில் அடங்கியுள்ள நியாயத்தை அவர் நன்கு எடுத்துக் காட்டினார். பிரிட்டனிடம் தமக்குத் துளிக்கூட துவேஷ உணர்ச்சியே கிடையாதென்று அவர் குறிப்பிட்டார். "நான் பேர்த்திலேயே திருஷ்டியுடையவன். ஸ்வராஜ்யத்தைப் பெறுவதே என்னுடைய வேலை" என்று அவர் உறுதியுடன் வெளியிட்டார். தேநீர் அருந்தி மீண்டும் சபை கூடியபோது பண்டித ஜவஹர் முக்கியமான தீர்மானத்தைப் பிரேரித்தார். இந்தியாவைச் சரிவரப் பாதுகாக்க வேண்டுமானால் காரியக் கமிட்டிகாட்டியுள்ள வழியை அநுஷ்டிக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஸர்தார் படேல் இந்தப் பிரேரணையைஆதரித்துப் பேசுகையில், வழக்கம்போல் குறை கூறுபவர் மனதில் முள் தைப்பதுபோலப் பல விஷயங்களை எடுத்துச்சொன்னார். "முஸ்லிம்களோ, அன்றி வேறு யார் வேண்டுமோ தற்காலிக அரசியல் ஒன்றை அமைக்கட்டும். எங்களுக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் பிரிட்டிஷ் ஆதிக்கம் உடனே மறையவேண்டியது அத்யாவசியம்" என்று அவர் திட்டமாகச் சொன்னார். இதோடு கூட்டம் மறு நாள்வரை ஒத்தி வைக்கப்பட்டது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி 8-ந் தேதி பகல் மூன்று மணிக்கு மீண்டும் கூடியது. ராஜீய நிலைமை சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட முக்கிய தீர்மானம் பெருவாரியான ஆதரவு பெற்று நிறைவேறிவிட்டது. 13 அங்கத்தினர்கள் தான் தீர்மானத்துக்கு எதிராக ஓட் கொடுத்தனர். திருத்தப் பிரேரணைகளில் மூன்று வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டன. மற்றவை நிராகரிக்கப் பட்டன. தீர்மானம் நிறைவேறிய பின் மகாத்மா சுமார் 2 மணி நேரம் பேசினார்.

## மகாத்மாவும் தலைவர்களும் கைது

மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம் ஆஸாத், ஸர்தார் வல்லபாய் படேல், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமதி ஸரோஜனி நாயுடு முதலிய எல்லா காங்கிரஸ் கமிட்டியங்கத்தினர்களும் சென்ற 9-ந் தேதி காலை 5-மணிக்கும் 6-மணிக்குமிடையே பம்பாயில் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் பம்பாய் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காரியதரிசி ஆகியவர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் காலையிலேயே ஸ்பெஷல் ரயிலில் அழைத்துச் செல்லப்பட்டனர். மாஜி பம்பாய் பிரதம மந்திரி பி. ஜி. கெர், மாஜி மந்திரிகளான மோரார்ஜி தேஸாய், நூரி, பம்பாய் மேயரான யூசப் மேஹரலி, ஹதிஸிங், எஸ். கே. படில், நாகின்தாஸ் மாஸ்டர் ஆகியவர்கள், கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பம்பாய் சட்ட

சபைத் தலைவர் ஸ்ரீ மாவ்லங்கரும், காந்திஜி காரியதரிசி மகாதேவ தேசாய், மீராபென் ஆகியவர்களும் கைதியாயினர்.

## சட்ட மறுப்பு பற்றிய செய்திகள்

மத்திய ஸர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்திரவொன்றின் ஸாரம் வருவாறு:—அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட பொதுஜன இயக்கத்தைப்பற்றியோ, அதை அடக்கச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையைப் பற்றியோ கீழ்க்கண்ட இனங்கள் மூலம் கிடைக்கும் செய்திகளைத் தவிர வியாக்கியானக் கலப்பற்ற வேறு தகவல் எதையும் பிரசுரகர்த்தர் அல்லது அச்சடிப்பவர் அல்லது ஆசிரியர் எவரும் அச்சடிக்கவோ பிரசுரிக்கவோ கூடாது. வியாக்கியானமற்ற தகவல் என்பதில் பொதுமக்களில் யாரும் வெளியிடும் பிரசங்கங்கள் அல்லது அறிக்கைகள் இவை பற்றிய விவரமும் சேர்ந்தது. மேலே குறிப்பிட்ட இனங்கள்;—(1) அதிகாரிகள் மூலம் கிடைக்கும் செய்திகள். (2) அஸோஸியேட்டட் பிரஸ், யுனைடெட் பிரஸ், ஓரியண்ட்பிரஸ். (3) சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு வழக்கமாகச் செய்தி யனுப்பும் நிருபர். அவர் தாம் எந்த ஜில்லாவில் வேலை செய்கிறாரோ அந்த ஜில்லாவின் கலெக்டரிடம் தமது பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

## இந்தியா ஸர்க்கார் முடிவு

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் வர்தா தீர்மானம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் ஊர்ஜிதமான பிறகு கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபை செய்த ஓர் தீர்மானம் வெளியிடப்பட்டது. காங்கிரஸ் தீர்மானத்துக்கு வருந்துவதாயும், அதில் அவர்கள் கூறியிருக்கும் சவாலைச் சமாளிக்க உறுதிகொண்டிருப்பதாகவும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இந்தியா மந்திரி பிரசங்கம்

இந்தியா மந்திரியான மிஸ்டர் எல். எஸ். அமெரி தலைவர்கள் கைதியானதன்பின் ரேடியோவில் பிரசங்கம் செய்தார். "காங்கிரஸ் நடத்த உத்தேசித்துள்ள இயக்கம் வெற்றி பெற்றால் தளவாட உற்பத்தியும் விமானக் கூடங்களை அமைக்கும் வேலையும் நின்று இந்தியாவின் யுத்த முயற்சி அனைத்தும் அடியோடு ஸ்தம்பித்துப்போய்விடும். ராணுவம் செயல் புரிய முடியாதபடி போய்விடும்; இவ்வாறு செய்வது சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் துரோகஞ் செய்வதாகும். இதனால் இந்தியாவே ஜப்பானியரால் அடிமை நாடாக்கப்படக்கூடும். காங்கிரஸ் தலைவர்கள் தங்களது கட்சியின் ஆதிக்கத்தைப் பெறுவதற்கான பொறுப்பற்ற விருப்பத்தில் கண்மூடித்தனமாக இத்தகைய நிலைமைகள் ஏற்படும்படி செய்யத் தயாராக இருக்கின்றனர். இந்த அறைகூவுதலும் ஆபத்து மேற்பட்டிருக்கையில் இந்திய ஸர்க்கார் காங்கிரஸ் இயக்கம் வலுப்பெற ஆரம்பிக்கு முன்பு துரிதமாகவும் உறுதியாகவு முள்ள நடவடிக்கையை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இக்கடமையைத் தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். தண்ட நடவடிக்கை எடுக்க எவ்வளவோ ஏராளமாக ஆதாரமிருக்கி

(16-ம் பக்கம் பார்க்க)



தலைவியின் வருகை

காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு வருகிறார்.



# சித்திரமும் சிருங்காரமும்

## எது தேவை?

படங்களைத் தயாரிப்பதில் பிராபல்யம் பெற்ற ஹால் ரோச் என்பவரைச் சமீபத்தில் பல பத்திரிகா நிருபர்கள்பேட்டியிட்டு, படத் தொழில் சம்பந்தமாகவும் தற் சமயம் எத்தகைய படங்கள் காட்டப்பட்டால் அவை திருப்திகரமாக இருக்கும் என்பதைப்பற்றியும் கேள்விகள் கேட்டனர். அவற்றிற்கு அவர் அளித்த பதில் மிகவும் ரஸமானது.

"நமக்கு அதைரியம் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், ஹாஸ்யப் படங்கள் தான் அதிகம் தேவை. இத்தகைய படங்களை அதிகமாகக் காட்ட நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பு தயாரிக்கப்பட்டவற்றில் பத்தில் ஒரு பங்கு கூட ஹாஸ்யபடம் இபபோது தயாரிக்கப்படுவதில்லை. இது வருந்தத்தக்கது.

"யுத்தத்தில் அகப்பட்டுக் கொண்டு அவதியுறும் நாடுகளிலிருந்து வரும் கடிதங்களைப் படித்தால் விஷயம் தெளிவாகும். அவர்களது வேண்டுகோள் இதுதான்: 'இன்னும் அதிகமாக ஹாஸ்யப்படங்களைத் தயாரியுங்கள். எங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் விசனத்தை சிறிது காலத்திற்காவது அகற்றுங்கள்!' என்பதே அது. ஹாஸ்யப்படங்கள் இப்போது முன்போல் அதிகம் தயாராகாமல் இருப்பதற்கு ஹாஸ்ய நடிகர்கள் மிகக் குறைந்து விட்டது தான் காரணம் என்று நான் கருதுகிறேன். மேபல்நார்மண்ட், போர்ட் ஸ்டர்லிங், சார்ளிசேஸ், ஹரால்ட் லாயிட், பஸ்டர் கீட்டன், லாரி ஸைமன் முதலிய பலர் முன்னாளில் இருந்து மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி வந்தனர். இப்போது அத்தகையவர் எவ்வளவு பேர் இருக்கின்றனர்?

"இப்போது ஹாஸ்ய நடிப்பில் அதிக சிரத்தை இல்லை. புதிதாக நடிப்புத் துறையில் ஈடுபடும் யுவர்களும் யுவதிகளும் கூட, ஹாஸ்ய நடிப்பு ஏதோ கௌரவக் குறைவானதுஎன்றே எண்ணுகின்றனர்எனத் தோன்றுகிறது. ஆரம்பிக்கும் போதேக்ளார்க் கேபிள், பெட்டி டேவிஸ் ஆகியவர்கள் போல் நடித்து அதிகப்பிரக்கியாதை யடையவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகவே டைரக்டர்களின் பொறுப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது. நமக்கு எத்தகைய நடிகர்கள் தேவையோ, அவர்களை எடுத்துக் கொண்டு அந்த விதத்தில அவர்களைத் தயாரிக்க வேண்டும். ஹாஸ்ய நடிப்பின் சிறப்பையும் அம்சங்களையும் நாம் இனி கூடிய வரையில் இளம் நடிகர்களுக்குப் போதிக்க வேண்டும்" இவ்விதம் தெரிவித்தார் இருபத்தைந்து வருஷங்களாக படப்பிடிப்பு அனுபவம் பெற்ற ஹால் ரோச்.

* * * *

## நடிக்கும் குடும்பம்

ஜோன் பென்னட் ஓர் பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர். குடும்பத்தின் கடைசிக் குழந்தை: ஆரம்பத்தில் ஜோனின் குடும்பநிலை அவள் மேற்கொள்ள விரும்பிய நடிப்புத் தொழிலுக்குப் பாதகமாக இருக்கும என நம்பப்பட்டது. ஆனால் அதுவே அவளை உத்சாகத்துடன் அதில் உழைக்கத் தூண்டி விட்டது.

அவளது சகோதரிகள்—கான்ஸ்டன்ஸ், பார்பரா- இருவரும் பிரபல நடிகைகள். தகப்பனார் ரிச்சர்ட் பென்னட்டும் பிரசித்திபெற்றவர். பதினெட்டாம் பிராயம் வரை ஜோன் நடிக்க முன்வரவில்லை. தான் மணந்து கொண்டு, ஒரு குழந்தையைப் பெற்ற பின்பு தான், அவள் படங்களில் நடிக்க முன் வந்தாள். அதுவும் ஒரு ஸாமான்ய பாத்திரத்தை அவள் நடிக்க நேர்ந்தது.

இப்போது ஜோன் நடிக்க ஆரம்பித்து பன்னிரெண்டு வருஷங்கள் பூர்த்தியாகி விட்டன. இது வரை 45 படங்களில் அவள் நடித்திருக்கிறாள்: சிறப்பாகவும் பெருமையுடனும் நடித்து நல்ல புகழையும் சம்பாதித்துக்கொண்டிருக்கிறாள்: தனது சகோதரிகளைக் காட்டிலும் தாழ்ந்தவள் இல்லை என்பதை அவள் நிரூபித்திருக்கிறாள்.

கொலம்பியா கம்பெனியாருக்காக ஒரு வேடிக்கைப் படத்தில் அவள் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறது. அவளுடன் நடிப்பவர் ப்ராஞ்சோடோன். யுத்த சம்பந்தமான படம் இது, இதற்கு முன்பு "மனித வேட்டை" "ஒப்புக் கொள் இல்லா விட்டால் மறுத்து விடு" என்ற யுத்த சம்பந்தமான இரு படங்களில் இவள் நடித்திருக்கிறாள்.

நியூயார்க்கில் 1910-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி ஜோன் பிறந்தாள். அவளுக்கு வீட்டிலேயே போதகாசிரியர்கள் அமர்த்தப்பட்டனர். ஆறும் பிராயத்திலேயே அவள் வெகு அத்புதமாக பியானோ வாசிக்கலானாள். 13-ஆம் வயதிலேயே பள்ளிக்கூடத்திலும் முதன்மையான ஸ்தானத்தை ஸ்வீகரித்தாள்.

பள்ளிக்கூடத்திலேயே பல நாடகங்களில் ஜோன் நடித்திருந்த போதிலும், சித்திரக் கலையில் பயிற்சி பெற விரும்பி, அவள் வர்ஸேலுக்கு போனாள். அப்போது அவளுக்கு வயது 16 தான்! அடுத்த வருஷம் இவளுக்கு விவாகம் நடந்தது: இதற்கு மறு வருஷம் அது ரத்தாகியது: ஒரு குழந்தையுடன் வேலைக்குத் தவிக்கவும் நேர்ந்தது. ஹாலிவுட்டைக் கடைசியாக அவள் வந்தடைந்தாள். அவளது தகப்பனார் ரிச்சர்ட் பென்னட் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு இவளை நியூயார்க்குக்கு அழைத்துத் தம்முடன் நடிக்கும்படிச் சொன்னார்.

அவளது நடிப்பு உடனே எல்லோராலும் கொண்டாடப்பட்டது. ரோனல்ட் கோல்மனுடன் சேர்ந்து நடிக்கும் சந்தர்ப்பமும் வாய்த்தது. இது முதற்கொண்டு இவர்களுக்குக் கிடைத்த கீர்த்தி குறையவே இல்லை. வேடிக்கை படங்களில் நடிப்பதிலும் அவளுக்கு விசேஷ திறமை உண்டு.

ஜோன் தற்போது வால்டர் வாங்கரின் மனைவி: இரு குழந்தைகள்—டோனா, மெலிண்டா- இவர்களுக்கிருக்கின்றன. தாய், நடிகை, மனைவி, ஆகிய மூன்று அம்சங்களையும் அவள் சரிவர நிர்வகித்து வருகிறாள். 5 அடி 3 அங்குலம் உயரம்; 114 பவுண்ட் எடை: பார்ப்பதற்கு வசீகரத்தோற்றம்.

நவநாகரீகம்

★

# தீபாவளி!

★

காசினி எழுதியது

* * * "என்ன புடவை வாங்கினாய்?" என்று மாலினி ஸரோஜாவைக் கேட்டாள்.

ஸரோஜா உதட்டைப் பிதுக்கித், தலையை அசைத்துத் தான் போட்டிருந்த சட்டையைத் தொட்டுக்காட்டினாள்.

"ஏன்? நீ புடவையே வாங்கிக்கவில்லையா?" என்று குரலில் ஆச்சரியம் தொனிக்க கமலினி கேட்டாள்.

"ஒரு புடவைக் கடைக்குப் போனேன்; ஒரு புடவையைப் பார்த்தேன். ரொம்பவும் நன்ருக இருந்தது—!" என்று சரோஜா கூறிக்கொண்டிருக்கும் போதே. 'அப்படியானால் அதை ஏன் வாங்கிக் கொள்ளவில்லையாம்?" என்று மாலினி குறுக்கிட்டாள்.

"அதுதானே சொல்லவந்தேன். கைத்தறி நெசவுப் புடவை; நூல் புடவை தான். நல்ல ஆழ்ந்த நீல வர்ணம். கறு நீலம் இல்லை; சுயமான நீலம். கரைக்கு ஒரு வரிசைக்கு நீளச் சதுரங்கள் சிகப்புப் பட்டில் விட்டு, விட்டுப் போட்டிருந்தது. அடுத்த வரிசைக்குப் பளிச் சென்ற சரிகையில் "டயமண்டுகள்" போட்டிருந்தது. மறுபடி சிகப்புச் சதுரங்கள்; இது முதல் வரிசையைப்போல் இல்லாமல், சற்றே சிறியதாக இருந்தது; மறுபடியும் சரிகை டையமண்டுகள்" தலைப்புக்குச் சிகப்புப் பட்டிக்கு நடுவில் பெரிய பெரிய சரிகை "டையமண்டுகள்" போட்டிருந்தது. துணிப் புடவை பாரு; இதனுல, நீலச் சாயம், பள பள என்று மின்னுமல், ரொம்பவும் அழகாக இருந்தது, ஏழு கஜம் புடவை! பார்த்தால் தான் இதன் நேர்த்தி புரியும்!" என்று கூறி ஸரோஜா பெருமூச்சு விட்டாள்.

"அப்படினு அதையேன் நீ வாங்கிக்கலை?" என்று நளினு தேவி அழுத்தமாகச் கேட்டாள்.

"முதலாவதாகப் புடவையின் விலை முப்பத்து எட்டே சொச்ச ரூபாய்! விலையைக் கேட்டதுமே 'ஒரு துணிப் புடவைக்கு இவ்வளவு விலையா?" என்று எங்க அம்மா முகத்தைச் சுளித்துக் கொண்டாள். இரண்டாவதாக முக்கியமாக, உன் நிறத்துக்கும் இந்தப் புடவைக்கும் கொஞ்சமும் பொருந்தாதது! என்று அப்பா சொன்னார், மாலினி மாதிரியில் அவ்வளவு சிகப்பாக இருந்தால் வாங்கிக்கலாம்! இதனால் இந்தப் புடவையை விட்டு விட்டேன்!"என்றாள் ஸரோஜா.

"அப்புறம் உனக்கு இந்தப் பிரபஞ்சத்தில் வேறு புடவையே கிடைக்கலையா?" என்றாள் மாலினி.

"அப்புறம் இந்தப் புடவையை நினைச்சு, நினைச்சு, எனக்கு வேறு எதுவும் முதலில் பிடிக்கலைத்தான். கடைசியில் ஒரு கடையில் ஒரு புடவை பார்த்தேன். இலேசான பாசிப்-பச்சைநிறம். பட்டுப் புடவைதான். ஆறே கஜம்தான் கரைக்கும் தலைப்புக்கும் சரிகை இலைவேலை எடுப்பாகச் செய்திருந்தது. உடலில், அங்கும் இங்கும் சிறிய இலைகள் போட்டிருந்தது. சரி, இதை வாங்கிக்கிறேன் என்றேன். விலை நூற்றி முப்பத்தி இரண்டு ரூபாய்கள் என்றான் கடைக்காரன். அப்படியே அதை வைத்துவிட்டு, ஒரு ஜாகட் பட்டுமட்டும் வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன்?' என்றாள் மாலினி.

"இது உங்க நாகரீகத்தின் பலன். எங்க நாளிலே அப்படி மனசுக்குப் பிடித்த புடவை இருந்தால், பொருந்துமா,ஏர்வையாக இருக்குமா என்றெல்லாம் பார்க்கமாட்டோம். ஆசைப் பட்டதை வாங்கிக் கட்டிக்குவோம்!" என்றாள் என் அத்தை.

"இதுக்காக தீபாவளிக்குப் புடவையே வாங்கிக்காமல் இருப்பாளோ?" என்று கமலினி அங்கலாய்த்துக் கொண்டாள்.

"எங்க அப்பா, ஆத்துக்காரர் எல்லாரும், நீ தான் சமத்து; இந்த யுத்த காலத்தில் விலைவாசி ஒன்னுக்குப் பத்தாய் இருக்கும் சமயத்தில், புடவையில்லா

(அடுத்த பக்கம் பார்க்க)

# புஸ்தக விமர்சம்

## உத்தரராம சரிதம்

மஹா கவி பவபூதி இயற்றியது ஸ்ரீ க. சந்தானம் மொழி பெயர்த்தது. விலை ரூ. 1-4-0: அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர்.

வட மொழிக் கவிகளுள் பவபூதி மிகப் பிரசித்தி பெற்றவர்: அவர் மூன்று நாடகங்களை எழுதினார். அவை உத்தரராம சரிதம், மாலதி மாதவம், மஹாவீர சரிதம் என்பவை. அவற்றுள் உத்தரராம சரிதம் தான் எல்லோருக்கும் திருப்திகரமானது. "உத்தரே ராமசரிதே பவபூதிர் விஸிஷ்யதே" என்ற பழைய வாக்கியத்திலிருந்தே இந்த நாடகத்தின் மதிப்பு புலனாகும். இப் புத்தகத்திற்குச் சிறந்த முன்னுரை யொன்றை எழுதியிருக்கும் ஸ்ரீ ராஜகோபாலாசாரியார், "பவபூதி தன் சாமர்த்தியத்தை உபயோகித்துப் பழைய கதையை ஓரளவு மாற்றிவிட்டான். ராமன் காட்டுக்குச் சென்று தேவியையும் லவ குசர்களையும் சந்தித்து அயோத்திக்கு அழைத்து வந்துவிடுகிறான். இதனால் மனதுக்கு ஓரளவு சாந்தி உண்டாகிறது. அசல் ராமாயணத்தில் சேராத இந்தக் கதையை எவ்விதம் மாற்றினாலும் குற்றம் இல்லையல்லவா? ஆகையால் பவபூதி தன் கற்பனா சாமர்த்தியத்தை உபயோகித்து, ஊர் வம்புக்குப் பயந்த கதையின் அவலக்ஷணத்தைக் குறைத்துவிட்டான்" என்கிறார். இது முற்றிலும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

பவபூதி இயற்றியுள்ள இந்த நாடகம் மிகவும் ரஸமானது: படிப்பவர்க்கு ருசி ஏற்படும் படிச் செய்வது. இந்த அழகிய நாடகத்தை ஸ்ரீமான் க. சந்தானம் சிறையில் இருந்த காலத்தில் மொழி பெயர்த்தார். கூடிய வரையில் முதல் நூலின் அழகுக்குப் பங்கமேற்படாத படி மொழி பெயர்த்திருக்கிறார். ஸ்லோகங்களை மொழி பெயர்க்கும் போது தான் சில குற்றங்குறைகள் காணப்படுகின்றனவாயினும், அவற்றைப் பெரிதாகப் பொருட்படுத்துவது பிசகாகும். வடமொழி தெரியாதவர்களும் அம்மொழியில் இருக்கும் அழகிய நூல்களை படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நல் நோக்கத்துடன் தான் இப்புத்தகம் எழுதப்பட்டிருப்பதால், நாம் இந்த முயற்சியை இனிது வரவேற்பதுடன், இதே மாதிரி சிறந்த பல கிரந்தங்கள் மேலும் நம் தாய் மொழியில் ஆக்கப்படுவதற்கு வழிகாட்ட வேண்டும்.

இப்புத்தகத்திற்கு ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் அளித்திருக்கும் முகவுரை ஒவ்வொருவரும் படித்து, சுயமாகச் சிந்திப்பதற்கு உதவுகிறது. இதை அல்லயன்ஸ் கம்பெனியில் நல்ல உயர்ந்த காகிதத்தில் வெகு நேர்த்தியான முறையில் அச்சிட்டுப் பிரசுரித்திருப்பதும் வாசகர்களால் போற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை.

* * * *

## பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள்

ஹிந்தியிலிருந்து கா ஸ்ரீ. ஸ்ரீ. மொழி பெயர்த்தது. அல்லயன்ஸ் கம்பெனியார் மயிலாப்பூர்—விலை ரூபா. 2-4-0

ஹிந்தி உலகில் கதை சக்ரவர்த்தி என்ற பெருமை பிரேம் சந்திரருக்குத்தான் உரிதாகும். அவர் அநேகம் சிறுகதைகளை எழுதியிருக்கிறார். இப்போது இந்தப்புத்தகத்தில் பத்து கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரமாயிருக்கின்றன. கா ஸ்ரீ. ஸ்ரீ வெகு அழகாக இனிய நடையில் கதைகளை தமிழ்ப்படுத்தியிருக்கிறார்: படிக்கும் போது நாம் ஒரு மொழிபெயர்ப்பு புத்தகத்தைப் படிக்கிறோம் என்ற உணர்ச்சியே ஏற்படுவதில்லை: வடநாட்டுப்பெயர்களைத் தவிர மற்றவையெல்லாம் நமக்கு மிக சகஜமாகவே இருக்கின்றன: இதற்குக்காரணம் மொழி பெயர்ப்பாளரின் திறமைதான். பொறுக்கியெடுக்கப்பட்டிருக்கும் கதைகளும் திரும்பத் திரும்பப்படித்தாலும் சலிக்க வைக்காதவை. பெண்மையுள்ளம், ஏழையின் நிலை—இவற்றின் தன்மையைப் பற்றியெல்லாம் பிரேம் சந்த் வெகு அற்புதமாக எழுதியிருக்கிறார். நம் உள்ளத்தில் அவை ஆழமாகப் பதியும்படி கதையைச் சித்தரித்திருக்கிறார். இதேமாதிரி ஒவ்வொரு கதையிலும் ஒரு புது அனுபவத்தை நாம் அனுபவிக்கிறோம். சீர்திருத்தத்தை வற்புறுத்துகிறது ஒரு கதை; மற்றொரு கதை புருஷருடைய ஸ்வபாவத்தை எடுத்துக் காட்டுகிறது: இன்னுமொரு கதையில் தாம்பத்திய வாழ்க்கையின் உயர்வு விளங்குகிறது. இந்தப் புத்தகம் ஒரு ஆச்சரியகரமான கதை விருந்து; தமிழ் நாட்டில் சிறு கதைத்திறன் அதிகரிக்க இப்புத்தகம் நிச்சயம் உதவும். சிறு கதை எழுதுவதில் நிகரற்று விளங்கிய ப்ரேம் சந்திரரின் கதைகளைப் படிப்பதால், சுயமாக எழுதவும் எண்ணம் பிறப்பது பொருத்தமல்லவா? இந்தப் புத்தகத்திற்கு ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் ஒரு முன்னுரை உதவி யிருக்கிறார்: இலக்கிய சிருஷ்டியைப்பற்றிய கட்டுரை அது. அல்லயன்ஸ் கம்பெனியாரின் இந்தப் பிரசுரமும் வாசகர்களது அன்பை அள்ளிக் கொள்ளும் விதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

இந்த இதழில் விமர்சிக்கப் பட்டிருக்கும் புத்தகங்கள் யாவும் "சுதேசமித்திரன்" புத்தகசாலைகளில் கிடைக்கும்.

## பாரத மணி பூஜா மலர்

"பாரத மணி" ஸரஸ்வதி பூஜா மலர் சிறந்த கட்டுரைகளும் உயர்தர வியாஸங்களும் அடங்கியதாய், வாசகர்களுக்கு களிப்பூட்டுவதாய் இருக்கிறது. மாயவரத்திலிருந்து தற்சமயம் வெளி வரும் இந்த மாதப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் கே. எஸ். வெங்கடரமணி ஒரு பிரபல எழுத்தாளர் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அவர் இம்மலர் முதற்கொண்டு தமது சுய சரித்திரத்தை ஆரம்பித்திருக்கிறார். ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன். ஸ்ரீ கி. சந்திரசேகரன் முதலியோர் இதில் எழுதியிருக்கும் கட்டுரைகள் இம்மலருக்குத் தனிச் சிறப்பை அளிக்கின்றன. "தமிழின் பெருமையும் நம்மவர் கடமையும்" "என்ற தலைப்புடன் காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய டாக்டர் சாமிநாதையர் எழுதியிருந்த கவிதையும், அவரது குமாரர் அதற்கு முன்னுரையாக எழுதியிருக்கும் வியாசமும், அவசியம் படிக்கத் தக்கதாகும். இதன் விலை அணா 6.

## தீபாவளி!

(முன் பக்கத் தொடர்ச்சி)

விட்டால் என்ன, கங்கா ஸ்நானம் தானே முக்கியம், புதுசு என்பதற்கு ஒரு சட்டை என்று திருப்தியாக இருப்பது தான் புத்திசாலித்தனம் என்று சொன்னார்கள்!" என்று ஸரோஜா பெருமையாகச் சொல்லிக் கொண்டாள்.

"நான் அந்த நூல் புடவை இன்னும் விலையாகி இருக்காவிட்டால் வாங்கிக்க போரேன்!" என்றாள் மாலினி.

"அந்தக் கடைக்குப் போனால் என் புடவைகள் வர இன்னும் எத்தனை நாளாகும் என்று கேளேன்; இதைக் கேட்காமல் வந்து விட்டேன்!" என்றாள் ஸரோஜா!

"உன் புடவையா?" என்றாள் நளினாதேவி.

"இதே தினுசில் எனக்குப் பொருத்தமான நிறத்தில் இரண்டு புடவைகள் போடச் சொல்லி இருக்கேன். எப்போ வரும் என்பதைக் கேட்டுக்க மறந்துட்டேன்!" என்றாள் சரோஜா!

"ஏதுடா அப்பா, நீ கூடப் புடவை வாங்காமல் இருந்து விட்டாய்! இனிமே ஒரு வேளை கலியுகமே முடிந்து விடுமோனு பயந்தே போனேன்! என்று கமலினியும் "அப்படிச் சொல்லு! ஒன்னுக்கு பதில் இரண்டு புடவையா?" என்று நளினாதேவியும், "நன்னாயிருக்கும் போ உன் சிக்கனத்தின் லக்ஷணம்!" என்று மாலினியும் அவளைப் பரிகசித்தார்கள் நீ புடவை வாங்கினாயா? இப்போ விற்கும் விலைகளைப் பார்த்தால் லேடி சின்னையா மாதிரி, தற்காலிதமாக யானை விலை, குதிரை விலை கொடுப்பதற்கு பதில் உள்ளே வைச்சிருக்கும் நல்ல புடவைகளையே கட்டலாம் என்று தோன்றவில்லையா? கங்கா ஸ்நானம் செய்தீர்களா? உங்கள் வீட்டிலும், ஊரிலும் எல்லாம் க்ஷேமமாக நடந்ததா என்பதற்கு பதில் எழுது.

## புதிய உலகம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு, அந்த பங்களாவில் ஓர் இள நங்கை அணிந்திருந்த ஜார்ஜெட் புடவை அவனுக்கு ஞாபகம் வந்தது.

அவன் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தான். ஒரு வீட்டுக்குள் எவனோ பஜனை செய்து கொண்டிருந்தான். வாமனன் அதைக் கவனமாகக் கேட்டான் "எங்கே சென்றினும் எனக்கு நீ தோழன்; கைப்பிடித்து என்னை நடத்துவாய்!; என்ற துகோபாவின் பாடல் அது

முன்பு கேட்ட அந்த வரி; 'என் வீட்டு வாசலில் ரோஜா மலர்ந்ததடீ!' இப்போது காதில் விழுந்த இந்த வரி: 'எங்கே சென்றினும் எனக்கு நீ தோழன்; கைப்பிடித்து என்னை நடத்துவாய்!"—முற்றும் வேறுபட்ட இரண்டு உலகங்கள் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாகச் சேர்ந்து அமைந்திருப்பதை வாமனன் உணர்ந்தான்.

பக்கத்திலிருந்த ஒரு பாறை மீது அவன் உடலைச் சாய்த்தான். "வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் என்ற நீதி வாக்கியத்தை இந்த நிரக்ஷர குக்ஷிகள் கேள்விப்படாமலிருக்கலாம்; ஆனால் இவர்கள் அதை இடைவிடாமல் நடத்திக் காட்டி வருகிறார்கள் இது இப்படியிருக்க படித்த மேதாவிகளான நாமோ? நீதி வாக்கியங்களை உருப்போடுவதும் அவைகளை ஒழுக்கத்தில் கொண்டுவர வேண்டிய தருணத்தில் அவைகளுக்குப் புறங்காட்டுவதும் தான் நம்மால் முடிகிறது" என்று வெகு நேரம வரை அவன் சிந்தனை செய்து கொண்டிருந்தான்.

கோழி கூவியது. நாலரை மணிக்கு ஆலைச் சங்கு ஊதியது. இராவேலை செய்த தொழிலாளிகள் ஆலையிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்களைப் பார்க்கும்போது, "இவர்கள் தான் உண்மையான வீரர்கள். நாம் வெறும் நீர்க்குமிழ்களே!" என்று தோன்றிற்று வாமனனுக்கு.

சற்று நேரத்துக்கெல்லாம் அவன் கண்ணயர்ந்தான். அடிக்கடி அவன் ஒரே கனவைக் கண்டு கொண்டிருந்தான்.

எங்கேயோ ஓரிடத்தில் எண்ணிலா வீரர்கள் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் உடலிலிருந்து ரத்த வெள்ளம் பெருகும் போது கூட 'நாங்கள் புதிய உலகத்து வீரர்கள் கடைசியில் எங்களுக்குத் தான் வெற்றி!" என்கிறார்கள். அந்தச் சைனியத்தில் சேர வேண்டுமென்ற தீவிரமான ஆவல் வாமனனின் மனத்தில் எழுகின்றது.

அவன் கண் விழித்த போது கிழக்கே சூரிய பிம்பம் மேலே வந்திருந்தது. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். தான் ஒரு புதிய உலகத்தில் பிறந்திருப்பது போல அவனுக்குத் தோன்றிற்று. ஆலைக்குச் செல்லும் தொழிலாளிகளின் கூட்டத்தில் அவனும் கலந்து கொண்டான்.

சிறுவர் கதை

★

# ஆயுள் பிரமாணம்

★

"தியாகராஜன்"

உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளையும் படைப்பவர் பிரம்மதேவன். காப்பவர் மகாவிஷ்ணு. அழிப்பவர் பரமசிவன்.

ஆதிகாலத்தில் பிரம்மதேவன் ஜீவராசிகளைப் படைத்தார். பின்பு அவர் அவைகளைப் பார்த்து "குழந்தைகளே! நீங்கள் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையாய் வாழ வேண்டும்; உதவி புரிந்து வாழுங்கள்" என்று கட்டளையிட்டு அனுப்பினார்.

பிறகு பிராணிகள் எல்லாம் ஒரு காட்டில் ஒன்று கூடின. "நமக்கு வாழ் நாள் எவ்வளவு? நாம் செய்ய வேண்டிய வேலை யாது?" என்று அறிய ஆவல் கொண்டு, அவை பிரம்மதேவனை நாடிச் சென்றன. முதலில் கழுதை, பிரம்மாவை நோக்கி, 'சிருஷ்டிகர்த்தாவே! நான் என்ன தொழில் செய்து பிழைப்பது? என் வயது எவ்வளவு?" என்று வினவியது. அவர், கழுதையின் அவசரத்தைக் கண்டு வெறுப்படைந்து, அதை நோக்கி, "கழுதையே! மக்களின் மூட்டைகளைச் சுமப்பதே உனது வேலை. உனக்கு ஆயுள் முப்பது" என்று கூறினார்.

இரண்டாவதாக வேறு ஒன்றும் கேட்கக் கழுதைக்கு மனம் வரவில்லை. அது வருத்தத்துடன் "ஐயனே! மூட்டை தூக்கும் எனக்கு முப்பது வயது ஏன்! என்று வருந்தி உரைத்தது. பிரம்மா மனமிரங்கி, "கர்த்தபமே, உனக்கு ஆயுள் பதினெட்டாக இருக்கட்டும்" என்று வாழ்த்தி அனுப்பினார்.

பின்பு நாயானது அயனை அணுகிப் பொறுமையுடன் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தது. அப்போது காற்று வேகமாகவே வீசவே, அங்குள்ள பொருள்கள் பறக்கலாயின. நாய் ஓடிச் சென்று, அவைகளை எடுத்து வந்து முன்னிருந்த படியே வைத்துக் கொண்டிருந்தது. பிரம்மா, நாயினது எண்ணத்தை யறிந்து "சுணங்கனே! நீ இங்ஙனமே அடக்க ஒடுக்கத்துடன் மனிதருக்குப் பணிவிடை புரிந்து வாழ்ந்துவரக் கடவாய்; வளர்ப்பவரிடத்தில் விசுவாசத்துடன் இருந்து ஊழியம் புரி! உனக்கு வயது முப்பது" என வரமளித்தார்.

சுணங்கன், மிக்க பணிவுடன், நான்முகனை வணங்கி, "ஐயனே! அவ்வளவு காலம் பிறர்க்கு ஏவல் புரிந்து நான் கஷ்டப் படுதல் கூடுமோ!" என்று வேண்டிக் கொண்டது. பிரம்மா, "நாயே! உன் விருப்பம் போல் உனக்கு பன்னிரண்டாண்டு நியமித்தேன். போ" என்றார்.

மூன்றாவதாக குரங்கு அயனை அணுகி துள்ளிக் குதித்தும், நெற்றியைச் சுளித்தும், முகத்தை நெறித்தும், பலவிதமான கோணங்கிகள் செய்தது. வானரத்தின் கருத்தைக் குறிப்பாலுணர்ந்தபிரம்மா "குரங்கே! நீ இவ்வாறே குறும்புகள் புரிந்து, முப்பதாண்டு வாழ்ந்திரு" என்றார். வானரம், "ஆண்டவனே! எவரும் என்னைக் குத்திக் கிளப்புவரேயன்றி வேறில்லை; எனக்கு இருபது வயதே போதும்" என்று கெஞ்சியது. நான்முகன் 'அப்படியே ஆகுக' என்று ஆசிர்வதித்து அனுப்பினார்.

கடைசியாக மனிதன் பிரம்ம தேவனை நமஸ்கரித்து நின்றான். பிரம்மதேவன், "மனிதனே! நீ சகல ஜீவராசிகளிலும் மேம்பட்டவன். ஆற்றிவு படைத்தவன். நீ சகல சாஸ்திரங்களையும் ஓதியுணர்ந்து எல்லா ஜீவராசிகளையும் அடக்கி ஆண்டு, மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்திரு. உனக்கு வயது முப்பதாகும்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மனிதன், "மலரவனே! எனக்கு இந்த அற்ப ஆயுள் போதாது" என்றனன். அது கேட்ட பிரம்மா, "அங்ஙனமாயின் கழுதையின் வயது பதினெட்டையும் எடுத்துக் கொள்" என்றார். மானிடன் 'அதுவும் போதாது' எனவே, பிரமன், நாயின் ஆயுள் பன்னிரண்டையும் சேர்த்து அளித்தனர். மனிதன் அப்போதும் அதிருப்தியுடன் இருக்கக் கண்ட பிரமன் "பேராசைக்காரனே! உனது ஆவல் அடங்க, வானரத்தின் வயது இருபதையும் சேர்த்து அனுப்பவி" என்று கட்டளையிட்டார்.

'ஆதலால் மனிதன் முதல் முப்பது வயதளவும், சுக போகங்களை அநுபவித்துச் சந்தோஷமாக வாழ்கிறான்; அதன் பின்பு கழுதையைப்போல் குடும்ப பாரம் தாங்கி உழன்று, தத்தளிக்கின்றான்; [illegible]னர் நாயின நிலையடைந்து மனைக்குக் காவலாகி, சள் ளு சள்ளென்று சினந்து, காலங் கழிக்கின்றனன். முடிவில் விருத்தனாகி, நரை, திரை, மூப்பு கொண்டு, ஒளி மழுங்கி, கண் குழிந்து, பல் விழுந்து, குரங்கு போலாகித் தடுமாறுகின்றனன்.

இருபதில் ஏற்றம்
முப்பதில் முறுக்கு
நாற்பதில் நழுவல்
ஐம்பதில் அசதி
அறுவதில் ஆட்டம்
எழுபதில் ஏக்கம்
எண்பதில் தூக்கம்





தன் எழில்வாய்ந்த சருமத்தைக் காப்பாற்றும் வழியைச் சொல்கிறாள்!

"என்னுடைய சருமத்தை மிருதுவாகவும், அழகாகவும் வைத்திருக்க லக்ஸ் டாய்லெட் சோப் ஏதுவாயிருக்கிறது என்பது தெரிந்துகொண்டேன்" என்று "ஏக் ராத்" படத்தில் நடித்து கீர்த்தி பெற்றுள்ள இந்த அழகிய நடிகை சொல்கிறாள். லக்ஸ் டாய்லெட் சோப்பின் நுரையை என் சருமத்தில் மிருதுவாகத் தேய்க்கிறேன்: அந்த நுரைக்கிருக்கும் உயர்தர மகிமையினால் சருமத்திலுள்ள அழுக்குகளைப் போக்கி, என் சருமத்தில் மாசு ஏற்படாதபடி சுத்தமாக்குகிறது. பிறகு சுத்தமான குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறேன். தினமும் அனுஷ்டிக்கும் இந்த சாதாரண முறை என் சருமத்தை சுத்தமாகவும், வசீகரமாகவும் செய்வதுடன் மிருதுவும், வாசனையும் அளித்து சருமத்தைப் புதிதாக்குகிறது.

தினமும் இச் சுலபமான முறையில் தங்கள் சருமத்தை அழகாக வைத்துக்கொள்ளும் அநேக சினிமா நடிகளில் நீனாவும் ஒருவள். அவர்கள் அனுஷ்டிக்கும் முறையின்படி சுலபமாக உங்கள் சருமத்தை லக்ஸ் டாய்லெட் சோப்பினால் பாதுகாருங்கள். இது மிகவும் சுலபமானது.




லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நடிகளின் சுந்திர சோப்

LTS. 59-169 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED